REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஒகஸ்ட் 29 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්
1932 - 2022

வரு. 90 இல. 203 | Monday 29, August, 2022 | 16 பக்கங்கள் | 40/-

## ஜனாதிபதி ரணில் தலைமையில் ஐதேக வின் 76 ஆவது மாநாடு

### செப். 06 ஆம் திகதி கொழும்பில்

ஐக்கிய தேசியக் கட்சியின் 76 ஆவது மாநாடு 'இணைவோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் செப்டெம்பர் 06ஆம் திகதி கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. ஐக்கிய தேசிய கட்சி தலைவர், ஜனாதிபதி 06

### G.C.E A/L பெறுபேறுகள் நேற்று வெளியாகின

## 01 இலட்சத்து 71 ஆயிரத்து 497 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி

### விபரங்கள் www.doenets.lk/exam results இணையதளத்தில்

49 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இடைநிறுத்தம்

லோரன்ஸ் செல்வநாயகம்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை 2021 ஆம் ஆண்டுக்கான பெறுபேறுகள் நேற்று வெளியாகியுள்ளன. இந்த பெறுபேறுகளுக்கு 06

### இலங்கையில் எரிபொருள் வர்த்தகத்தில் ஈடுபட

## சர்வதேச நாடுகளை சேர்ந்த 24 நிறுவனங்கள் முன் வருகை



### விசேட குழு மூலம் ஆராய்வு

லோரன்ஸ் செல்வநாயகம்

சர்வதேச நாடுகளில் உள்ள 24 நிறுவனங்கள் இலங்கையில் எரிபொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு முன் வந்துள்ளதாகவும் அதற்கான யோசனைகளை அந்த நிறுவனங்கள் முன் வைத்துள்ளதாகவும் 06

### வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடைக்கால நிர்வாகம்;

## அமைச்சர் டக்ளஸின் அறைகூவலுக்கு தமிழ் தரப்பிலிருந்து பெரும் வரவேற்பு



### புத்திஜீவிகள், மதப் பெரியார்கள், அரசியல் விமர்சகர்கள், சமூக அமைப்புக்கள் பாராட்டு காலம் தாழ்த்தாது செயலில் இறங்குமாறும் அழைப்பு

யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து வடக்கு, கிழக்கு 06

### டயஸ்போரா தமிழர்களின் பிரச்சினைகளை ஆராய

# புலம்பெயர் அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பம்



### தீர்வைக் காண்பதற்காக நீதியமைச்சர் மூவரடங்கிய குழுவை நியமித்தார்

**முன்னாள் பிரதம நீதியரசர் அசோக் டி சில்வா தலைமையிலான குழுவினர் தமிழ் அமைப்பு பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி அரசுக்கு அறிக்கை சமர்ப்பிப்பர்**

லோரன்ஸ் செல்வநாயகம்

புலம்பெயர் தமிழர் பிரதிநிதிகள் எழுப்பிய கரிசனைகள் குறித்து தீர்வை காண்பதற்காக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ முன்னாள் பிரதம நீதியரசர் அசோக் டி சில்வா தலைமையில் மூவர் கொண்ட குழுவை நியமித்துள்ளார். 06

## இலங்கையில் பயிற்சி பெற்ற தாதியர் UK யில் பணிகளை ஆரம்பிக்க தயார்

### நியமனக் கடிதங்கள் அமைச்சர் அலி சப்ரியினால் கையளிப்பு



ஐக்கிய இராச்சியத்திலுள்ள (UK) மருத்துவமனைகளில் பணியைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ள இலங்கையின் பயிற்சி பெற்ற தாதியர் குழுவுக்கான நியமனக் கடிதங்களை,(25) லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் நடைபெற்ற விழாவில் வைத்து வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி கையளித்தார். லண்டனிலுள்ள 06

## வத்தளையில் கடத்தப்பட்ட இளைஞன் ஜா- எலவில் மீட்பு

### சம்பந்தப்பட்ட பலர் பொலிஸாரால் கைது



வத்தளை, ஹெந்தலை பகுதியிலுள்ள தனியார் வங்கியொன்றுக்கு அருகில் கடத்தப்பட்ட இளைஞனை பொலிஸார் மீட்டுள்ளனர். கடத்தப்பட்ட இளைஞனை விடுவிப்பதற்காக முச்சக்கரவண்டியில் 06

### மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள்;

## தமிழருக்கு தீர்வை வழங்காது காலத்தை கடத்துவதாக குறை!

### சம்பந்தன் கடும் விசனம்



மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் தமிழருக்கான அரசியல் தீர்வு தொடர்பில் காலத்தைக் கடத்துகின்றன. இதை இனியும் அனுமதிக்க முடியாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார். 06

### ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியாக

## அமைச்சர் நஸீர் அஹமட் சவூதி அரேபியா பயணம்

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக சுற்றாடல் துறை அமைச்சர் நஸீர் அஹமட் சவூதி அரேபியாவுக்கு (28) பயணமானார். ஜனாதிபதியின் விஷேட 06



## SJB சிரேஷ்ட எம்.பிமார் ஐவருக்கு அமைச்சுப் பதவி?

### உயர் மட்ட வட்டாரங்களில் தகவல் கசிவு

ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து பேர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பையேற்று இவர்கள் அமைச்சரவையில் இணையவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவர்கள் நல்லாட்சி அரசாங்கத்தில் பலம்மிக்க அமைச்சுப் 06

## சஜித்தின் சகோதரி வெளிநாடு பயணம்

### நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிப்பு



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் சகோதரி துலாஞ்சலி பிரேமதாச நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரியவருகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டை எரித்த சம்பவத்தின் போது 06

## முறையற்ற முறையில் வெளிநாட்டு நாணயங்களை கையாளும் நபர்கள்

### விசாரணை நடத்த பொலிஸ் குழு நியமனம்

முறையற்ற விதத்தில் வெளிநாட்டு நாணயத்தை கையாளும் நபர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மாஅதிபரினால் பொலிஸ் சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான பிரிவிலேயே குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரின் கோரிக்கைக்கமைய இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய சட்டரீதியான வங்கி செயற்பாடுகளுக்கு புறம்பாக முறையற்ற விதத்தில் வெளிநாட்டு நாணய பரிமாற்றம் மற்றும் வெளிநாட்டிலுள்ள இலங்கையருடாக 06

## அடுத்த மாதம் முதல் எயார் இந்தியா சேவைகள் பலாலிக்கு ஆரம்பம்

### சுற்றுலா அதிகார சபை தலைவர் தெரிவிக்கிறார்




எயார் இந்தியா விமான சேவை அடுத்த மாதம் முதல் யாழ்ப்பாணம் பலாலி சர்வதேச விமான நிலையத்துக்கான விமான சேவைகளை ஆரம்பிக்க உள்ளது.

எயார் இந்தியா விமான சேவை நிறுவனம் பலாலி சர்வதேச விமான நிலையத்துக்கு வாரத்திற்கு இரண்டு சேவைகளை அடுத்த 06

## கோதுமை மாவின் விலை அதிகரிப்பு

### பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு



சந்தையில் ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 350 ரூபாவாக அதிகரித்துள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. கோதுமை மாவை இறக்குமதி செய்யும் 06



## அத்துமீறி மீன்பிடித்த 06 இந்திய மீனவர் கைது

தலை மன்னார் கடற்பரப்பில் சம்பவம் 03



ஆசியாவின் மிகப்பெரிய மாணிக்க கல்;

## சுவிட்சர்லாந்து நகரில் விற்பனைக்காக காத்திருப்பு

03



## SSP ருவனுக்கு பொலிஸ் திணைக்களத்தில் புதிய பதவி

சட்டப்பிரிவின் பணிப்பாளராக நியமனம் 03

### பேலியகொடை பொலிஸார் அதிரடி

## 33 கிலோ போதைப் பொருள் மற்றும் ரூ.30 இலட்சத்துடன் 03 பேர் கைது

லோரன்ஸ் செல்வநாயகம்



33 கிலோவுக்கும் அதிகமான கொக்கெய்ன் மற்றும் ஐஸ் போதைப் பொருட்களுடன் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். பேலியகொடை பகுதியில் இவர்கள் மூவரையும் கைது செய்துள்ளதாகவும் 06

## பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய்; போதுமான அளவு கையிருப்பில்

### தட்டுப்பாடின்றி நாடு பூராவும் வழங்க முடியும் – CPC தெரிவிப்பு

நாடு முழுவதும் தட்டுப்பாடின்றி விநியோகம் செய்யக்கூடிய வகையில், டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் உள்ளிட்ட அனைத்து எரிபொருளும் கையிருப்பிலுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இது தொடர்பில் சிபெட்கோ விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், தொடர்ந்து எரிபொருளை 06

## நீரில் மூழ்கி காணாமல் போன காதலன்

## அதிர்ச்சியில் காதலி தற்கொலை



மாத்தறை, பிடபெத்தர பகுதியில் நில்வளா கங்கையில் நீராடச் சென்று காணாமல் போன இளைஞனின் காதலி நில்வளா கங்கையின் கிளை ஆறான கிரமாரா ஓயாவில் குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

காணாமல் போன மனுஷ்க யோஹான் என்பவரின் காதலியே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார். கம்புருபிட்டிய, மீபாவிட்ட, ரன்சகொட பிரதேசத்தில் வசித்து வந்த அஷானி ஹன்சிகா என்ற 19 வயது யுவதியே இவ்வாறு 06



# சித்தாண்டி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா



வரலாற்றுப் புகழ்மிக்க சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவமானது 26.08.2022 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்து 15 நாட்கள் மஹோற்சவம் நடைபெற்று இறுதிநாளான பௌர்ணமித் தினத்தன்று 10.09.2022 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறவிருக்கின்றது.

சித்தாண்டி எனும் கிராமம் மட்டக்களப்பு நகரின் பதிமூன்று கல் தொலைவில் மேற்குப்பக்கமாக நெல்வயல்களும் ஏரிகளும் சூழ்ந்த இயற்கைச் செழிப்போடு அமையப்பெற்றுள்ளது. இவ் செழிப்புமிக்க ஆலயமே ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயமாகும். இவ்வாலயம் இராசகோபுரம் மணிக்கோபுரங்கள் ஆகியவற்றோடு கிழக்கிலங்கையின் அதி உன்னத ஸ்தானத்தில் சிறப்புற இன்னும் காட்சிதருகின்றது.

**ஆலயத்தின் தோற்றம் வரலாறு**

சித்தாண்டி ஸ்ரீ சித்திரவேலாயத சுவாமி கோயிலுக்கு கர்ணபரம்பரைக் கதைகளும் வாய்மொழிக் கதைகளும் எடுத்துக்காட்டுகின்றன. இந்த வகையில் பண்டிதர் வீ. சி. கந்தையா ' செகண்டி' முனிவருடைய 'வேலை' சிறு குடிசையில் வைத்துப் பூசித்தாரென்றும் இதை அறிந்த மக்கள் இங்கு சென்று வழிபாட்டு முனிவரால் இஷ்டசித்திகளைப் பெற்றனர். என்று குறிப்பிட்டுள்ளார். இம் முனிவர் பல அற்புத சித்திகளைச் செய்தமையால் சித்தர் என்ற பெயரும் நீறு பூத்த மேனியுடனும் உருத்திராக்க கோலத்துடனும் விளங்கியமையினால் ' ஆண்டி' என்ற பெயரும் சேர்ந்து (சித்து, ஆண்டி ) சித்தாண்டி என காரண இடு குறிப்பெயரால் அமைந்ததாகச் சொல்லப்படுகின்றது.

இக்கோயில் பற்றிய வரலாற்றினை 4 வகையான மரபு வழிக் கதைகள் உண்டு என கலாநிதி வ. குணபாலசிங்கம் ஈழத்து இந்துக் கோயில்கள் எனும் நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

ஆண்டி ஒருவன் பல காதவழியைக் கடந்து காட்டு மார்க்கமாகச் சென்ற போது அவனை மத யானை ஒன்று வழிமறித்தது அவ்வேளையில் ஆண்டி முருகனை நினைத்து அபயக்குரல் கொடுத்தான் அக் குரலைக் கேட்டதும் ஆண்டி முன்தோன்றி மத யானையைக் கொன்று சித்திர வேலாயுத சுவாமி காத்ததினால் வேலை வைத்து வழிபட்டதாக மரபு வழிக் கதையாகவுள்ளமை.

ஆண்டி வாழ்ந்த இடத்தில் வேல் வைத்து வணங்கிய பகுதியைச் சூழ பல இடங்களில் இருந்து வந்த மக்கள் குடியிருப்புக்கள் அமைத்தனர். அவர்களுக்கு தலைவனாக வேட வண்ணியன் பேரில்லாவெளியில் இருந்து ஆட்சி செய்து வந்தான். அவனது ஆட்சியின் கீழ் இக் கோயில் இருந்தமை பற்றியும் இக் கோயிலுடன் தொடர்புடைய மரபுவழிக் கதைகள் போர்த்துக்கேயர் தொடர்புபடுத்தப்பட்டுள்ளார்கள் இவை தொடர்பான மரபு வழிக் கதைகளில் சிகண்டி முனிவரின் அத்தி மரம் ஒன்றின் கீழ் தவம் புரிந்தனர் அங்கிருந்த வன வேடர்கள் அவரைக்கண்டு பணிந்து தொழுதனர். இவை பற்றியும் மரபு வழிக் கதைகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

இத்தகைய சிறப்புமிக்க ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச் சிறப்புக்களோடு அமைந்துள்ளது. என்பதற்கு தென்கிழக்கில் அமைந்துள்ள தீர்த்தக்கேணி சான்று பகிர்கின்றது. இக்கோயில் வருடா வருடம் ஆவணி பிரதமையில் கொடியேறி பௌர்ணமித் தினத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெற்று முடிவடைகின்றது. திருவிழாக்கள் 15ம் குடி வாரிசாக நடக்கும் எனவும் அக்குடிகளின் தொகை ஏழாக இருப்பினும் அவற்றுள் மூன்று குடிகளே முக்கியம் என்பது ' பட்டயம் ' ஒன்றால் தெளிவாக்கப்படுகின்றது. இம் மூன்று குடிகளும் வன்னிமைக் குடி தலைமை வண்ணக்கரை வன்னியனார் என்றும் சொல்வர் மற்றைய இரு குடிகளும் புதூர்க்குடி, அத்தியா குடி என்றும் சொல்லப் படுகின்றன.

கோயில் ஆதனங்கள் நெற்காணி மூந்நூறு (300) அளவில் கொண்டதாக சொல்லப்படுகின்றது. இது பண்டைய மன்னர்களாலும் பிற்காலத்து புரவலர்களாலும் மானியமாக வழங்கப்பட்டது.

இதை விட குருக்கள் பட்டி என்ற வயல் சுமார் பத்து (10) ஏக்கர் அளவுடையதாகவுள்ளது.

பூசகர் பரம்பரை சைவக் குருக்களான குருநாத வம்சத்தார் என்பவர்களிடமிருந்து வந்த இவர்கள் வீர சைவக் குருமாரே என்று அறியக் கிடைக்கின்றது. இக் குடியார் குறைபாடு இன்றிக் கோயிற் பூசையைச் செய்து வந்தமை தெரிகின்றது.

இப்பரம்பரையில் பின்னர் குறைவு ஏற்படுதல் காரணமாக 1975 ஆம் ஆண்டு முதல் ' பிராமணரை' அழைத்து பூசை நடத்தப்பட்டு வருகின்றது.

கோயில் பற்றிய தல புராண நூலொன்று ஆரப்பற்றை அழகேச முதலி என்பவரால் சித்தாண்டித் தல புராணம் என்றும் மகுடமிட்டு பாடப்பட்டுள்ளது.

இதை விட தனிப் பிரார்த்தனைப் பாடல்கள் திருவாளர் பிள்ளையான் சிவலிங்கம் திருவாளர் பனிக்கன் மயில்வாகனம் என்போர் இயற்றியுள்ளார்கள் பட்டயம் என்று வழங்கப்படும் தலைப் பற்று ஓலையிலான ஏடு ஒன்று இக் கோயிலின் பண்டைய வரலாற்றுக் குறிப்புக்கள் மானியங்கள் நடைமுறைகள் பற்றியுள்ளது.

இவைகள் ஆலயத்தின் முக்கியமான சொத்தாக விளங்குவதுடன் வரலாற்று ஆவணமாகவும் மிளிர்கின்றது.

கலாநிதி, கலைச்சுடர்,சாமஸ்ரீ,
கீர்த்திஸ்ரீ, இலக்கிய வித்தகர்
நாராயணபிள்ளை நாகேந்திரன் (JP)...
ஓய்வு நிலைஅதிபர், களுவாஞ்சிகுடி





கிருஷ்ணஜயந்தி நிகழ்வுகள் உடப்பு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தில் கிருஷ்ணஜயந்தி நிகழ்வுகள் (20) திகதி சனிக்கிழமை இரவு இடம்பெற்றது. இதன்போது சிறுவர்கள் கிருஷ்ணன் வேடம் அணிந்து வந்ததுடன், விஷேச வசந்த மண்டபப் பூஜைகளும் இடம்பெற்றன.
(படங்கள்: உடப்பு குறூப் நிருபர்)

## மானுடவியல்
(தொடர்)

### கழறிற்றறிவார் நாயனார்



86

இறைவனது திருவருளால் தமக்குரிய அரசுரிமையில் வழுவாது ஆட்சிபுரிந்த இறைவனைப் பேரன்பினால் விரும்பி வழிபடுமியல்பும், புல் முதல் யானை ஈறாக உள்ள எல்லா உயிர்களும் மக்கள் யாவரும் தம் நாட்டு அரசியலின் நன்மை குறித்துத் கூறுவனவற்றை மனத்தினால் உய்த்துணர்ந்து கொள்ளும் நுண்ணுர்வும், கெடாத வலிமையும், கைம்மாறு கருதாது இரவர்க்கு ஈயவல்ல (கொடுக்கவல்ல) கொடை கெடாத வண்மையும், நாடாள் வேந்தர்க்கு இன்றியமையாத படை ஊர்தி முதலிய அரசுறுப்புக்களும் ஆகிய எல்லா நலங்களும் உயர் திணை மக்களும் கழறிய (மிருகங்களின்) சொற்பொருளை உய்த்துணரும் நுண்ணறிவினைப் பெற்றவர் பெருமாக்கோதையாராதலின் அவர்க்கு கழறிற்றறிவார் என்பது காரணப்பெயராயிற்று.

உலகுயிர்கள் கழறுச் சொற்கள் அனைத்தையும் உணரும் ஆற்றல் பெற்ற பெருமாக்கோதையார், தாம் முடிசூடிச் சேரநாட்டினை ஆட்சி புரிதல் வேண்டும் என்பது சிவபெருமான் திருவுள்ளக் கருத்தாதலை உணர்ந்து வணங்கி அமைச்சர் வேண்டுகோளுக்கு இசைந்தருளினார். அவரது இசைவுபெற்று மகிழ்ந்த அமைச்சர்கள் வேண்டுவன செய்ய உரிய நன்னாளில் திருமுடிசூடி இவ்வுலகத்தை ஆட்சிபுரியும் பெருவேந்தராயினார்.

மலைநாட்டரசராய் மணிமுடி சூடிய சேரமான் பெருமாள் நாயனார். திருவஞ்சைக்களத் திருக்கோயிலை வலம் வந்து வணங்கிப் பட்டத்து யானை மீது அமர்ந்து வெற்றிக்குடையும் வெண்சாமைரையும் பரிசனங்கள் தாங்கிவர, நகரில் நகரில் திருவுலா வந்தனர்.

**(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

## சைவ ஆலயங்களில் வேதங்களோடு தமிழ்த் தோத்திரங்களும் அதிகளவில் இசைக்கப்பட வேண்டும்

நல்லூரில் இவ்வாண்டு தொடக்கம் தமிழ் தோத்திரப் பாடல்களுக்கு அதிக முதன்மை வழங்கப்படும் நடைமுறையை கோவிலில் நிர்வாக அதிகாரி ஏற்படுத்தியுள்ளமை மகிழ்ச்சிக்குரியது எனக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி அதிபரும், சைவச் சொற்பொழிவாளருமாகிய செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தெரிவித்துள்ளார்.

இந்த மாற்றம் ஏனைய ஆலயங்களிலும் ஏற்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஆகமம் சார்ந்த வழிபாடுகளில் பக்த ஸ்தோத்திரம் என்ற நிலையில் தமிழுக்கும் முதன்மை வழங்கப்பட வேண்டும். எமது மண்ணில் பக்தர்களின் மொழி தமிழாக இருக்கின்றமையால் இது அவசியமானது.

திருக்கேதீஸ்வரத்தில் சேர்.கந்தையா வைத்தியநாதன் திருமுறைகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கினார். போர்த்துக்கேயரால் கோவில் அழிக்கப்பட்ட போது பெருமான் சொற்கோவிலாகவே திகழ்ந்தார் என்பதன் அடையாளம் அது.

ஒவ்வொரு சந்நிதானத்தில் பூசை இடம்பெறும் போதும் தேவாரம் புராணம் பாடும் மரபு திருக்கேதீஸ்வரத்தில் காணப்படுகிறது. நல்லூரில் தற்போது திருமுறைப் பாடல்கள், அருணகிரியாரின் கந்தரனுபூதி மற்றும் திருப்புகழ் சேனாதிராஜ முதலியார் ஊஞ்சல் வித்துவான் வேந்தனாரின் பள்ளியெழுச்சி, நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் நல்லூர் திருப்புகழ், யோகி தவ.கஜேந்திரனின் நல்லூர்த் திருப்புகழ் மற்றும் நல்லைக் கந்தன் கீர்த்தனைகள் எனத் தமிழ்க் கடவுளுக்கு வேத மந்திரங்களுக்கு இணையாக தமிழ்ப் பாக்களும் இசைக்கப்படுகின்றன.

நமது தலைமை ஆலயங்கள் இரண்டிலும் ஏற்பட்ட இந்த மாற்றம் ஏனைய ஆலயங்களிலும் தொற்றுகை அடைய வேண்டும்.

வேத பாராயணத்தின் பின் திருமுறை பாராயணம் செய்து ஆசீர்வாதம் மேற்கொள்ளும் நடைமுறையும் ஏற்படுத்தப்பட வேண்டும். குருமாரும் ஆலய பரிபாலகர்களும் கூடிய கவனம் செலுத்த வேண்டிய விடயம் இது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**(19245) முருகனுக்கு உகந்த கிழமை எது?** தமிழ்க் கடவுளான முருகனை வழிபடவும் அவரது அருள் பரிபூரணமாக கிடைக்கவும் செவ்வாய்க் கிழமை தரிசனம் செய்வது சிறப்பாகக் கருதப்படுகிறது.

**(19246) செவ்வாய்க் கிழமை விரதம் இருந்து முருகனை வழிபட்டால் என்ன பலன் கிடைக்கும்?** தொழில் வளர்ச்சியும் ஆரோக்கியமும் சீரடையும்

**(19247) நவகிரகங்களில் செவ்வாய் கிரகத்துக்கு உகந்த தெய்வமாக யாரை வழிபாடு செய்கிறோம்?** முருகனை

**(19248) முருகனுக்கு உகந்த நிறம் என்ன?** சிகப்பு

**(19249) நவகிரகங்களில் செம்மண் நிலப்பரப்புடைய கிரகம் எது?** செவ்வாய்

**(19250) ஆலய வழிபாட்டில் முருகனுக்கு எவற்றைக் கொண்டு பூஜை செய்யப்படுகிறது?** சிவப்பு நிறத் துணியும், சிவப்பு மலர்களும், சிவப்பு நிற துவரையும் கொண்டு

**(19251) முருகனுக்குரிய விரதங்கள் எத்தனை?** மூன்று

**(19252) முருகனுக்குரிய விரதங்கள் மூன்றும் எவை?**

வார விரதம் : செவ்வாய்கிழமை விரதம்
நட்சத்திர விரதம் : கார்த்திகை விரதம்
திதி விரதம் : சஷ்டி விரதம்

**(19253) கிரகங்களில் செவ்வாய்க்கு அதிபதி யார்?** முருகன்.

**(19254) செவ்வாய்கிழமைகளில் முருகனை நினைத்து விரதமிருந்தால் என்ன நடக்கும்?** மனதிலும், குடும்பத்திலும் அமைதி நிலவும்

**(19255) கார்த்திகை நட்சத்திர விரதம் எப்போது அனுஷ்டிக்கப் படுகிறது?** கார்த்திகை நட்சத்திரத்தன்று

## "யுகரிஷியின் ஆன்மீகச் சிந்தனைகள் - 4



ஆபத்து அல்லது கஷ்ட காலங்களில் மனிதன் வீணாக கலங்கியும், அமைதியின்றியும் தனது ஆற்றலை வீணடித்து விடுகிறான். அவ்வாறு அவன் வீணடிக்கும் ஆற்றலின் ஒரு பகுதியை நிதானமாக அமைதியுடன் சிந்தித்து செயலாற்றினால் எவ்வளவு பெரிய துன்பத்திலிருந்தும் மிக எளிதாக அவன் வெளிவர முடியும். துன்பம் வந்தும் துவண்டு விடக்கூடாது. துன்பத்தை வெல்லும் வழியை யோசிக்காமல், துவண்டு போய் தம் திறமைகளை வீணாக்கக் கூடாது. எதிர்கொள்ள வேண்டிய கடமைகளை ஆற்றாமல், என்ன செய்வது', 'எங்க போவது 'எப்படி தப்பிப்பது' என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தால் நமக்கு வந்த சிறு துன்பம் கூட நூறு மடங்கு வளர்ந்து விடும்.

வாழ்க்கையில் வரும் இன்பதுன்பங்களை நடுநிலை உணர்வுடனும் தைரியமாக எதிர் கொள்ள வேண்டும். இன்ப துன்பங்களை நம் வாழ்க்கைப் பாதையில் கடந்து செல்லும் பாதசாரிகளைப் போல் பாவிக்க வேண்டும். அவைகள் எவ்விதத்திலும் நமக்கு சம்பந்தமில்லாதவை என்று உணர வேண்டும்.

அமைதியான மனமும். பேதலிக்காத அறிவும் மனிதனின் இரு பெரும் சக்திகளாகும். இவை இரண்டின் உதவியைக் கொண்டு பெரும் இக்கட்டான சூழ்நிலையைக் கூட நாம் எதிர்கொள்ள முடியும். துன்பங்கள் வரலாம், போகலாம். சூழ்நிலைகள் மாறலாம். வாழ்க்கையை சுகமானதாக ஆக்கவும். திருப்திகரமாக அமைப்பதற்கும் மனிதன் எந்த ஒரு சூழ்நிலையிலும் தன் ஆற்றலை வீணடிக்கக் கூடாது.

பரந்து விரிந்து கிடக்கும் ஆசைகளில். நல்லெண்ணங்கள் மட்டுமே விருப்பம் என்கிற வரையறைக்குள் வருகின்றன. நல்லெண்ணங்களால் உருவாகும் நல்ல விருப்பங்கள் அபரிதமான சக்தி உடையவையாகும். நற்காரியம் செய்ய விரும்பும் அல்லது மேன்மையான லட்சியத்தை அடைய விரும்பும் ஒருவன், தனக்கெதிராக லட்சக்கணக்கான விரோதிகள் வந்தாலும், பலவித அசௌகர்யங்கள் உண்டானாலும், தான் கொண்ட குறிக்கோளில் வெற்றி அடைந்தே தீருவான்.

நல்ல எண்ணம் கொண்டவன். தான் கொண்ட குறிக்கோள் வெற்றியடைய வேண்டும் என்ற முயற்சியில் இடைவிடாது. தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பான். தன் குறிக்கோளும், முயற்சியும் ஒன்று சேரும் போது அவனிடம் ஓர் ஆன்மீக ஊற்று உருவாகி, அதன் மூலம் தன் லட்சியத்தில் வெற்றி பெறுவதற்கான முயற்சியில் ஒவ்வொரு நொடியும் முன்னேறிக் கொண்டே இருப்பான்.

நல்ல விருப்பங்களை கொண்ட மனிதனிடம் நம்பிக்கை. உற்சாகம், துணிவு, செயலாற்றும் தன்மை ஆகியவைகளுக்கு குறைவிருக்காது. வெற்றி பெறுவதற்கான குணங்கள் அவனிடம் நிறைந்திருக்கும். தோல்வி என்பதே அவனை நெருங்காது. தீய எண்ணம் கொண்டவனின் விருப்பம், நஞ்சு போல் நம் சக்தியினை அழித்து விடும். அவனிடத்தில் நல்லெண்ணங்கள் வளர்க்கப்படுமாயின் அவனிடத்திலும் நம்பிக்கை. சுறுசுறுப்பு போன்ற நற்குணங்கள் மேம்படும். நல்லதொரு விருப்பம், அதை அடைவதற்கான ஈடுபாடு. அதற்கான சக்தி ஆகிய யாவும் ஒன்றிணைந்தால் எப்பேற்பட்ட லட்சியத்தையும் நாம் அடைந்து விடலாம். இதில் எவ்வித சந்தேகத்திற்கும் வாய்ப்பு இல்லை.

**(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்





கொழும்பு, கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயத்தில் பகவான் கிருஷ்ண பரமாத்மாவின் அவதார தினமான கடந்த 19ஆம் திகதி வெள்ளியன்று ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஸ்டமி விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. விழாவில் கலந்துகொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும், குழந்தைக் கிருஷ்ணரை தொட்டிலில் தாலாட்ட மக்கள் வரிசையில் செல்வதையும் படங்களில் காணலாம்.





கொழும்பு- தெகிவளை நெடுமால் ஸ்ரீ வெங்கடேஸ்வரமஹா விஷ்ணு மூர்த்தி தேவஸ்தானத்தில் ஸ்ரீ கிருஷண ஜெயந்திவிழாவையொட்டி உறியடி உற்சவம் நடைபெற்றது. (படங்கள்: வடகொழும்புதினகரன் நிருபர்)

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்

THINAKARAN தினகரன்

2022 ஓகஸ்ட் 29 திங்கட்கிழமை

**தொழுகை நேரம்**

27 முதல் 29 வரை
சுபஹ் - 04.47
லுஹர் - 12.13
அஸர் - 03.22
மஃரிப் - 06.21
இஷா - 07.32

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆவணி 13
ராகுகாலம் : பகல் : 7.30 - 9.00வரை
சுபநேரம் : காலை : 6.00 - 7.30வரை
யோகம்: சித்த யோகம்
திதி: துவிதியை







சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அலி தினகரனில் எழுதிய நேர்காணல்களின் தொகுப்பு 'இளம் தலைமைத்துவ ஆளுமையும் சஹீட் எம். ரிஸ்மியுடனான நேர்காணலும்' என்ற நூலின் வெளியீட்டு விழா ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தலைமையில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவை தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தலைமையிலான ஏற்பாட்டில் கொழும்பு மெண்டரினா ஹோட்டலில் நேற்று பின்னேரம் நடைபெற்றது. இவ்வைபவத்தில் நூலின் முதல் பிரதிகளை சஹீட் எம். ரிஸ்மி, ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் உள்ளிட்டவர்களுக்கு வழங்கி வைப்பதையும் வைபவத்தில் கலந்து கொண்ட பிரமுகர்கள் மேடையில் காணப்படுவதையும் படங்களில் காணலாம். (படம்: சமந்த வீரசிறி, அஷ்ரப் ஏ சமத்)

## ஜனாதிபதி ரணில் மீது நாட்டு மக்கள் நம்பிக்கை

### TPA எம்.பி உதயகுமார் தெரிவிக்கிறார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மீது நாட்டு மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்தார்.



தனியார் வானொலியொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் சில விடயங்களில் அவரின் செயற்பாடுகள் திருப்தியளிக்கவில்லையென தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் மயில் வாகனம் உதயகுமார் தெரிவித்தார்.

**எரிபொருள் வரிசையை குறைக்க**

## எதிர்வரும் 03 தினங்களில் மேலதிகமாக எரிபொருள்

### நாடு பூராவும் விநியோகிக்க ஏற்பாடு



நாட்டில் தற்போதுள்ள எரிபொருள் வரிசையை குறைக்கும் வகையில் எதிர்வரும் 03 நாட்களில் மேலதிக எரிபொருள் கையிருப்பை நாடு முழுவதும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தனது டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளதாவது ,

எரிபொருளை இறக்குவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தாமதமாக பணம் செலுத்துவதால் எரிபொருள் வரிசைகள் மீண்டும் உருவாக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

போதியளவு எரிபொருள் கையிருப்புக்கள் இல்லாத காரணத்தினால் கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளிலுள்ள பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளதுடன், திறந்திருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகளில் மக்கள் காத்திருப்பதையும் காணமுடிகிறதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நுரைச்சோலை மீள ஆரம்பம் மின் துண்டிப்பு கால எல்லை குறையும் சாத்தியம்



மின்துண்டிப்பு கால அளவை இன்று திங்கட்கிழமை முதல் குறைப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

திடீரென செயலிழந்த நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின், முதலாம் மின்பிறப்பாக்கி மீள ஆரம்பிக்கப்பட்டு, தேசிய மின்

06

## வன்னாத்திவில்லு இஸ்மாயில்புரம் கிராமத்தில் யானைகள் அட்டகாசம்



**தாக்குதலில் இளைஞர் காயம்**

வன்னாத்திவில்லு இஸ்மாயில்புரம் கிராமத்துக்குள் பயிர்களை நாசம் செய்த யானையை விரட்ட முற்பட்டபோது ஒருவர் காட்டு யானையின்தாக்குதலுக்குள்ளாகி புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

06

**எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பில்**

## மாசடைந்த கடற்கரையை சுத்தப்படுத்த காப்புறுதி நிறுவனத்தால் 1.5 பில். ரூபா



### நட்ட ஈடு பெறுவது தொடர்பில் சட்ட ஆலோசனைக்கு ஆஸி. நிறுவனம்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் மூழ்கியதால் வெளியிடப்பட்ட ப்ளாஸ்டிக் மற்றும் கழிவுகளால் சேதமடைந்த கடற்கரையை சுத்தப்படுத்துவதற்காக கப்பல் காப்புறுதி நிறுவனத்தால் 1.3 பில்லியன் ரூபா பணம் திறைசேரிக்கு கிடைத்துள்ளதாக கடற்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் வழக்கறிஞர் தர்ஷனீ லஹதபுர தெரிவித்தார்.

கடலில் மூழ்கிய எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் சரக்குக் கப்பல் காரணமாக கடற்கரைக்கு மற்றும் கடற்கரையை அண்டிய கடலுக்கு ஏற்பட்ட சூழல் சேதத்தைக் கணிப்பிடுவதற்கான முதலாவது இடைக்கால அறிக்கை கப்பல் விபத்துக்களில் நஷ்டஈடு பெற்றுக் கொள்வது பற்றிய நிபுணத்துவத்தையுடைய அவுஸ்திரேலிய வழக்கறிஞர் நிறுவனம் ஒன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக

06

**ஆசியாவின் மிகப்பெரிய மாணிக்க கல்;**

## சுவிட்சர்லாந்து நகரில் விற்பனைக்காக காத்திருப்பு

### இரத்தினக்கல் ஆபரண அதிகார சபை தகவல்

ஆசியாவின் மிகப் பெரிய மாணிக்கக்கல் எனக் கூறப்படும் இரத்தினபுரியில் கண்டெடுக்கப்பட்ட ஆறுனூல் இரத்தினக்கல் ஆறு மாதங்களுக்கு முன் சுவிட்சர்லாந்துக்கு கொண்டு செல்லப்பட்டபோதிலும் இதுவரை விற்பனை செய்யப்படவில்லையென இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை தெரிவித்துள்ளது.



விற்பனைக்காகவோ அல்லது பரிசோதனைக்காகவோ எடுத்துச் செல்லப்பட்ட இந்த மாணிக்கக் கல்லின் பெறுமதி 2,000 கோடி ரூபாவுக்கும் அதிகமென அதிகார சபையின் தலைவர் திலக் வீரசிங்க தெரிவித்தார்.

இரத்தினம் மற்றும் நகைச் சட்டத்தின் கீழ் ஆய்வு அல்லது விற்பனைக்காக

06

## அத்துமீறி மீன்பிடித்த 06 இந்திய மீனவர் கைது

### தலை மன்னார் கடற்பரப்பில் சம்பவம்

*மன்னார் நிருபர்*



இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 06 இந்திய மீனவர்களை சனிக்கிழமை (27) இரவு தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்துள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

தலைமன்னார் கடற்பரப்பில் சர்வதேச கடல் எல்லையூடாக இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 06 இந்திய மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளதோடு அவர்கள்

06



ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் அமைப்பான ஐக்கிய இளைஞர் சக்தியின் செயற்குழு உறுப்பினராக அனுஷன் கணேசலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளதோடு, அதற்கான நியமனக்கடிதத்தினை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவிடமிருந்து பெற்றுக்கொள்வதையும் ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் தேசிய அமைப்பாளர் சமித் விஜேசுந்தர அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## SSP ருவனுக்கு பொலிஸ் திணைக்களத்தில் புதிய பதவி

### சட்டப்பிரிவின் பணிப்பாளராக நியமனம்



இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் சட்டப் பிரிவின் பணிப்பாளராக முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேக்கர நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவினால் இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் ஒப்புதலுக்குட்பட்டு கடந்த 22 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

## பேராதனை பல்கலை மாணவன் மகாவலி ஆற்றில் குதித்து மாயம்?



### தேடுதல் பணி ஆரம்பம், பொலிஸார் தீவிர விசாரணை

பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தில் மூன்றாவது வருடம் கல்வி கற்கும் மாணவரொருவர் பேராதனை பாலத்திலிருந்து மகாவலி ஆற்றில் குதித்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பாலத்திலிருந்து மாணவன் குதித்ததை கண்டதாக கூறிய நபர் ஒருவரின் கூற்றை அடிப்படையாகக் கொண்டு பொலிஸ் உயிர் காப்பு பிரிவினர் மற்றும் கடற்படையினர் நீரில் மூழ்கி காணாமல் போன மாணவனை தேடும் நடவடிக்கையை (27) ஆரம்பித்துள்ளனர். நுவன் லக்சித்த தேவசுரேந்தர (24) என்னும் எஹலியகொட பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவர் ஒருவரே இவ்வாறு காணாமற் போயுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மாணவனின் பயணப் பையொன்றை பாலத்தின் அருகில் இருந்து போலீசார் கண்டுபிடித்துள்ளனர். அதில் காணப்பட்ட அடையாள அட்டையின் மூலம் மாணவர் பேரதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தில் மூன்றாவது வருடம் கல்வி கற்பவர் என உறுதி செய்ததாக பல்கலைக்கழக பதில் வேந்தர், ஊடகப் பேச்சாளர் பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் தெரிவித்தார்.

06

**கல்முனை, சாய்ந்தமருது பகுதியில்**

## சொகுசு வாகனமொன்றில் போதைப்பொருள் கடத்தல்



### STF அதிரடி, 02 பேர் கைது, வாகனம் பறிமுதல்

நீண்ட காலமாக சொகுசு கார்களில் சூட்சுமமாக ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருட்களை கடத்தியதாக கூறப்படும் இருவரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து (27) மாலை சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரை வீதியிலுள்ள உணவகம் ஒன்றுக்கு அருகில் விசேட அதிரடிப்படையினர் நடத்திய தேடுதலில் சொகுசு காரில் போதைப் பொருட்களுடன் பயணித்த 02 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். கைதான நபர்கள் கல்முனைப் பகுதியை சேர்ந்த 44 மற்றும் 23 வயதுடையவர்களென பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஐஸ் போதைப் பொருள் 06 கிராம் 80 மில்லிகிராம் மற்றும் ஹெரோயின் 05 கிராம் 580 மில்லி கிராம் உள்ளிட்ட 04 கைத்தொலைபேசிகள்

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 244.50 | 256.43 |
| கனடியன் டொலர் | 272.16 | 285.15 |
| யூரோ | 353.45 | 368.56 |
| ஜப்பான் யென் | 2.5937 | 2.6993 |
| சிங்கப்பூர் டொலர் | 254.19 | 265.21 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 418.55 | 435.71 |
| சுவிஸ் பிராங்க் | 368.26 | 385.71 |
| அமெரிக்க டொலர் | 357.40 | 368.71 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 957.52 | கட்டார் ரியால் | 98.22 |
| குவைத் டினார் | 1,173.60 | சவூதி ரியால் | 96.12 |
| ஓமான் ரியால் | 937.65 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.28 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 13ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 30

**குறள் தரும் சிந்தனை**

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின்

அடுத்தவர்களின் பார்வை வேறுபடுவதைக் கொண்டே அவர்தம் மனக்கருத்தை அறியும் ஆற்றல் உடையவர்க்கு, பகைமையையும் நட்பையும் அவர்கள் சொல்லவில்லை என்றாலும் அவர்தம் கண்களே சொல்லிவிடும்.

# நாட்டில் மீண்டும் அதிகரிக்கும் டெங்கு நோய் அச்சுறுத்தல்!

இலங்கையில் டெங்கு வைரஸ் நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனை சுகாதார அமைச்சின் தொற்று நோய்கள் தடுப்பு பிரிவுத் தரவுகள் தெரிவித்துள்ளன.

மழையுடன் கூடிய காலநிலை அடிக்கடி நிலவுவதுதான் இந்நிலைக்குக் காரணம் என்பதில் ஐயமில்லை. அதாவது டெங்கு நோய் ஏற்படுத்தக் கூடிய வைரஸை நுளம்புகளே காவிப் பரப்புகின்றன. இந்நுளம்புகள் தெளிந்தநீர் தேங்கும் இடங்களில் பல்கிப் பெருகும் தன்மையைக் கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் சிரட்டைகள், உடைந்த மற்றும் கைவிடப்பட்ட மட்பாண்டங்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், பொலித்தீன் அடங்கலான பொருட்களில் தெளிந்தநீர் தேங்கி நிற்கின்றது. அவ்வாறான திண்மக் கழிவுகள்தான் இவ்வகை நுளம்புகள் பல்கிப் பெருகப் பெரிதும் துணைபுரிகின்றன. அதனால் இத்தகைய திண்மக் கழிவுப் பொருட்களை ஒழுங்குமுறையாக முகாமைத்துவம் செய்ய வேண்டும். இதில் விடப்படும் தவறுகளின் விளைவாகவே வீட்டு சுற்றுச்சூழலிலும் பொது இடங்களிலும் இந்நுளம்புகள் அடிக்கடி பல்கிப் பெருகுகின்றன.

இவ்வாறு பெருகும் இந்நுளம்புகள்தான் டெங்கு வைரஸை பரப்புகின்றன. இந்நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் போது இவ்வைரஸின் தாக்கத்தையும் பெருவீழ்ச்சி நிலைக்கு கொண்டு வர முடியும். இருப்பினும் திண்மக் கழிவுப் பொருட்களை ஒழுங்கு முறையாகக் கையாள வேண்டியதன் அவசியமும் முக்கியத்துவமும் மக்களால் உணரப்படாதுள்ளது. இதனையும் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் டெங்கு நுளம்புகள் அடிக்கடி டெங்கு அச்சுறுத்தலைத் தோற்றுவிக்கக் கூடியனவாக உள்ளன.

இந்த நிலையில் தற்போது டெங்கு நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதை மருத்துவ நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இது தொடர்பில் சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்புக்கான தேசிய வேலைத்திட்டத்தின் பணிப்பாளர் டொக்டர் சுதத் சமரவீர குறிப்பிடுகையில், 'இந்நாட்டில் இவ்வருடம் இற்றை வரையும் 53 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். எதிர்வரும் நாட்களில் இந்நோய்க்கு உள்ளாகக் கூடியவர்களின் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது. மழைக் காலநிலையுடன் கூடிய நாட்களாக இருப்பது இதற்கு சாதகமாக இருக்கும். இதனைக் கருத்தில் கொண்டு தற்போது டெங்கு அச்சுறுத்தல் அதிகளவில் காணப்படும் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, இரத்தினபுரி, கேகாலை, கண்டி ஆகிய ஏழு மாவட்டங்களிலுள்ள 60 மருத்துவ அதிகாரி அலுவலகப் பிரிவுகளில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு டெங்கு ஒழிப்புக்கான விஷேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது' என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

'அதேநேரம் இந்நாட்டில் வீடுகளிலும் வீட்டுச் சூழலிலும்தான் அதிகளவில் டெங்கு நுளம்புகள் பல்கிப் பெருகுவதாகக் கருதப்படுகின்றது. ஆனால் அவற்றை விடவும் பாடசாலைகள், பயணிகள் பஸ், ரயில் நிலையங்கள், தொழிற்சாலைகள் உள்ளிட்ட பொதுஇடங்கள் இந்நுளம்புகள் அதிகளவில் பல்கிப் பெருகும் இடங்களாக விளங்கிக் கொண்டிருப்பதை மறந்துவிட முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுக் கூறத் தவறவில்லை.

டெங்கு நோயைப் பொறுத்த வரையில் ஒன்றில் நுளம்பு பெருகுவதற்கான சாதகமான வாய்ப்புகளை ஒழிப்பதன் மூலம் அதன் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம். இல்லாவிடில் இந்நோய்க்கு உள்ளானால் முறையான மருத்துவ ஆலோசனையுடன் உரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதன் மூலம் இந்நோயைக் குணப்படுத்திக் கொள்ள முடியும்.

இருந்த போதிலும் இந்த இரு வழிமுறைகள் தொடர்பிலும உரிய கவனம் செலுத்தப்படாததன் விளைவாகவே இந்நோய் அச்சுறுத்தலாக அமைகின்றது. ஆனால் டெங்கின் அச்சுறுத்தலை மிகவும் இலகுவாக முறியடித்து கட்டுப்படுத்திக் கொள்ளலாம் என்பதுதான் மருத்துவர்களின் கருத்தாகும்.

ஆகவே டெங்கு அச்சுறுத்தலை தவிர்த்து கொள்வதில் ஒவ்வொருவரும் அதிக கவனமும் அக்கறையும் கொள்ள வேண்டும். குறிப்பாக டெங்கு ஒழிப்பின் நிமித்தம் சுற்றாடலையும் பொது இடங்களையும் தெளிந்த நீர் தேங்க முடியாதபடி சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்துக் கொள்ள வேண்டும். இதன் நிமித்தம் வாரத்திற்கு ஒரு நாளில் சுமார் ஒரு மணித்தியாலயமாவது சிரமதானப் பணிகளை முன்னெடுக்க வேண்டும். அது டெங்கு ஒழிப்பின் நிமித்தம் நாட்டுக்கும் மக்களுக்கும் அளிக்கும் பாரிய சேவையாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விசேட அக்கறை

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தா விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக்குழுவை 2020 ஆம் ஆண்டு பொறுப்பெடுத்த சிறிது காலத்திலேயே மாவட்டத்தின் நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து வந்த இரண்டு கல்வி வலயங்களை உருவாக்கும் திட்டத்தை நிறைவேற்றியிருந்த அமைச்சர் டக்ளஸ், புதிதாக உருவாக்கப்பட்ட கிளிநொச்சி வடக்கு மற்றும் தெற்கு வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கல்விசார் உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் உள்ளிட்டோரை தனித்தனிக் குழுக்களாகச் சந்தித்து அந்தந்த வலயங்களின் தேவைகள் குறித்து விசேடமாக ஆராய்ந்தார்.

ஒகஸ்ட் 16ஆம் திகதி கிளிநொச்சி தெற்கு வலயத்துக்கான விசேட சந்திப்பை மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் கமலராஜன் தலைமையிலான குழுவினருடன் நடத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தொடர்ந்து 17 ஆம் திகதி கிளிநொச்சி வடக்கு வலயத்துக்கான சந்திப்பை வடக்கு கல்வி வலயம் அமைந்துள்ள பரந்தன் இந்து மகாவித்தியாலய மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் சிவனருள்ராஜா தலைமையில் நடத்தினார்.

இதன்போது, வலயக கல்விப் பணிமனை மட்டத்திலான தேவைகள் முதற்கொண்டு, பாடசாலைகளின் பௌதிக, ஆளணி மற்றும் இதர பற்றாக்குறைகள், உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடிய அமைச்சர், அவற்றுக்கான தீர்வை படிப்படியாகப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

கட்டடங்கள் அமைத்தல் போன்ற பௌதீக வளங்கள் சார்ந்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதிவளம் தற்போது அரசாங்கத்திடம் இல்லாத காரணத்தினால், அவற்றை சாத்தியமான வழிகளில் நீண்டகால அடிப்படையிலும், அதேசமயம், ஆளணித் தேவைகள் உள்ளிட்ட ஏனைய வளத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கவும் இதன்போது அவர் உறுதியளித்தார்.





மேலும், மாவட்ட அளவில் கல்வி வளர்ச்சிக்கென விசேட நிதியம் ஒன்றை உருவாக்கி, அதனை கல்வித்துறை சார்ந்த தரப்புக்களே கையாண்டு தேவைகளை இனங்கண்டு நிறைவேற்றுவதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்குவது தொடர்பாகவும் பரிந்துரைத்த அமைச்சர் டக்ளஸ் தேவனாந்தா, மாவட்ட மட்டத்தில் பாரியளவிலான முதலீடுகளை மேற்கொள்ளும் தனியார் முதலீட்டாளர்களிடமிருந்து சமூகப் பொறுப்புணர்வு வேலைத்திட்டத்தின் கீழ் நிதியுதவிகளைப் பெற்று பல தேவைகளை நிறைவுசெய்ய ஏற்பாடு செய்வதாகவும் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்புக்களைத் தொடர்ந்து, 18 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்துக்கு வருகை தந்திருந்த கல்வியமைச்சர் கலாநிதி சுசில் பிறேமஜயந்த மற்றும் கல்வியமைச்சின் செயலாளர் ஜெயசிங்க ஆகியோருடனான சந்திப்பு ஒன்றை இரண்டு வலயங்களின் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுடன் மாவட்டச் செயலகத்தில் ஏற்பாடு செய்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அந்தச் சந்திப்பின்போது இரண்டு வலயங்களினதும் பல்வேறு தேவைகள் குறித்தும் கல்வியமைச்சரின் நேரடிக் கவனத்துக்கு எடுத்துச் செல்லவும் நடவடிக்கை எடுத்திருந்தார்.

இதேபோல், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மூன்றாம் நிலைக் கல்விச் சேவை நிறுவனங்களான ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், தொழிற்பயிற்சி அதிகாரசபை, தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, தேசிய சமூக கல்வி அபிவிருத்தி நிறுவனம் மற்றும் திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் நேரில் சந்தித்து அவர்களது தேவைகள் குறித்தும் கேட்டறிந்து அவற்றை நிறைவேற்றவும் நடவடிக்கை எடுத்தார்.

# நிந்தவூர் கடலரிப்பை தடுக்க நடவடிக்கை!

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேசத்தில் தீவிரமடைந்துள்ள கடல் அரிப்பைத் தடுக்கும் நடவடிக்கையாக உடனடியாக 20 மில்லியன் ரூபாவை ஜனாதிபதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் ஜனாதிபதியின் செயலாளருடன் நடத்திய நேரடி சந்திப்பின் போது இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் கட்ட நடவடிக்கையாகவே இந்த நிதி ஒதுக்கீடும் ஏனைய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுவதாக ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் எக்கநாயக்கவை சந்தித்த பைசல் காசிம் எம்பி, இந்தக் கடல் அரிப்பின் அவலத்தை எடுத்து விளக்கினார். இதனையடுத்து கரையோர பாதுகாப்புத் திணைக்களம், துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து அமைச்சின் செயலாளர், துறைமுக அதிகார சபையுடன் ஜனாதிபதியின் செயலாளர் தொடர்பு கொண்டு அவசர பணிப்புரைகளை விடுத்ததுடன், இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

இதேநேரம், அவசர தடுப்பு நடவடிக்கையாக, ஒலுவில் துறைமுகத்தினுள் இருக்கின்ற கற்பாறைகளை விடுவித்து நிந்தவூர் பிரதேச கரையோரங்களுக்குள் அவற்றைப் போடுமாறு துறைமுக அதிகார சபைக்கு, துறைமுக அதிகார சபையின் தலைவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

துறைமுக அதிகார சபையின் தலைவர் கயான் அழகவத்தகேயுடன் பைசல் காசிம் எம்.பி நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து உடனடி நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பு பாரிய பிரச்சினையாக உருவெடுத்து இருக்கின்ற நிலையில், பைசல் காசிம் எம்.பி இது சார்ந்த அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களுடன் 2022.08.25 ஆம் திகதி பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். இதன் பலனாக முதல்கட்டப் பணிக்காக இருபது மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதேநேரம், ஒலுவில் துறைமுகத்துக்குள் இருக்கின்ற கற்பாறைகளை விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க முடிந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். .

## ஜனாதிபதியின் செயலாளருடன் பைசால் காசீம் எம்பி சந்திப்பு: தடுப்பு நடவடிக்கைக்கு முதல்கட்ட நிதி ஒதுக்கீடு





பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளருமான வஜிர அபேவர்த்தனவையும் சந்தித்த பைசால் காசீம் எம்.பி. இது விடயத்தை விரிவாக தெளிவுபடுத்தினார். கடலரிப்பை தடுப்பதற்கான துரித பணிகளை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வஜிர அபயவர்த்தன துறை சார் அமைச்சுகளின் செயலாளர்களுக்கு பணிபுரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில், கரையோர பாதுகாப்புக்கு பொறுப்பான அமைச்சரான பிரசன்ன ரணதுங்கவை சந்தித்ததோடு, கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தினுடைய பணிப்பாளர் நாயகம் ரணவக்கவையும் சந்தித்து விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

இதனைத் தொடர்ந்து, துறைமுக கப்பல் துறை அமைச்சின் செயலாளர் ருவன் சந்திரவை சந்தித்த பைசல் காசிம் எம்பி, கடல் அரிப்பு சம்பந்தமான நீண்ட விளக்கம் ஒன்றை வழங்கினார். நிந்தவூர் பிரதேசத்தின் நிலைமையை அவரிடம் விளக்கியதையடுத்து, இந்த விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் ஆர்வமாக இருப்பதால், தடுப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்ற 'ஜியோ பேக்'களை உடனடியாக வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டும். இதற்குரிய டொலரை பெற்று தருவதாக, ஜனாதிபதியின் செயலாளர் சமன் எக்கநாயக்க உறுதி அளித்தார்.

இதே நேரம், கடல் அரிப்பு தொடர்பாக நேரில் ஆராய்ந்து நிரந்தர தீர்வு காண்பதற்காக, உயர் மட்ட தொழில்நுட்ப குழு ஒன்றை அனுப்புவதாகவும் அவர் உறுதி அளித்தார். இதன்படி விரைவில் நிந்தவூர் பிரதேசத்துக்குச் செல்லும் உயர்மட்ட குழு, கடல்அரிப்புக்கான நிரந்தரத் தீர்வு காண்பதற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் முதல் கட்ட செயல்பாடாகவே முன்னெடுக்கப்படுவதாக ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்தார். முழுமையான ஆய்வொன்று நடத்தப்பட்டு நிந்தவூர் கரையோர பிரதேசங்களை பாதுகாப்பதற்கான நிரந்தர வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் தெளிவுபடுத்தினார்.

இதேவேளை, கரையோர பிரதேசங்களை பாதுகாப்பதற்காக இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கும் திட்டங்களின் வரைபடங்களையும் பைசல் காசிம் ஜனாதிபதியின் செயலாளரிடம் கையளித்தார். இது தொடர்பாக விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் நடத்தப்பட்டு, நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் உறுதி அளித்துள்ளார்.

**றிசாத் ஏ. காதர்...**
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர், சமூகத்தின் பெண் தலைவர்களுக்கான பன்மைத்துவப் பயிற்சிப் பட்டறை

வீட்டில், சமூகத்தில், அரசியலில் மற்றும் நாட்டில் பன்மைத்துவம் மிளிர வேண்டுமானால் இன, மத, மொழி மற்றும் அரசியல் பேதமின்றி விட்டுக்கொடுப்பு மனப்பாங்கு வளர்ந்து மனிதம் பேணப்பட வேண்டும். இதனை வலியுறுத்தி உள்ளூராட்சிமன்ற பெண் உறுப்பினர்கள் மற்றும் சமூகத்திலுள்ள பெண் தலைவர்களுக்கான பன்மைத்துவம் மற்றும் ஒன்றிணைத்தல் பற்றிய முழுநாள் விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறை மட்டக்களப்பு, கல்லடி கிரீன் கார்டன் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது.

இலங்கை சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட சர்வமத பேரவையினால் இந்நிகழ்வு நடத்தப்பட்டது. சர்வமத பேரவையின் மாவட்ட இணைப்பாளர் ஆர். மனோகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய சமாதானப் பேரவையின் திட்ட முகாமையாளர் என். பாசுதேவன், சர்வமத பேரவையின் மாவட்ட உதவி இணைப்பாளர் எச்.ஏ. எம். ஹமீட் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசியலில் பன்மைத்துவத்தை உருவாக்கும் நோக்கில்தான் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 25 வீதமாக பெண்களின் பிரதிநிதித்துவம் உள்வாங்கப்பட்டது. இதனால் இலங்கையில் 340 உள்ளூராட்சி மன்றங்களில் உள்ள 8000 பேரில் 20 வீதமான பெண்கள் சுமார் 1900 பேர் பிரதிநித்துவம் பெற்றுள்ளனர் என இந்நிகழ்வில் வளவாளராகக் கலந்து கொண்ட பேராதனை பல்கலைக் கழக அரசறிவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இரா. ரமேஷ் தெரிவித்தார்.

"92 வீதம் எழுத்தறிவு கொண்ட இலங்கையின் சனத்தொகையில் சுமார் 53 வீதம் பெண்கள் உள்ளனர். ஆனால் பெண்களுக்கு அரசியலில் சமத்துவம் இல்லை. நெருக்கடியை முகாமைத்துவம் செய்யும் ஆற்றல் பெண்களிடம் காணப்படுவதால் மக்களின் எழுச்சிப் போராட்டங்கள் ஊடாக இலஞ்சம் மற்றும் ஊழலற்ற முற்போக்கு சிந்தனையுள்ள பெண் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு மக்களுக்கு சேவையாற்ற முன்வர வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

பக்கச்சார்பற்ற மற்றும் மதச்சார்பற்ற அரசியலை மேம்படுத்தி பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, பூகோள விழுமியங்களின் நம்பிக்கையை மதித்தல், வேற்றுமையை மதித்தல் மற்றும் பொது நன்மைக்காக விட்டுக் கொடுத்தல் மூலம் பன்முகத்தன்மையை கட்டியெழுப்பலாம். முரன்பாட்டைக் கையாள்வதில் மனப்பாங்கில் மாற்றம் அடிப்படையிலிருந்து வர வேண்டும். முக்கியமாக பாடசாலைக் காலத்திலிருந்து பேணப்படல் வேண்டும்.





பன்மைத்துவம் மலர ஜனநாயக கலாசாரம் பேணப்பட வேண்டும். எல்லா இனங்களுக்கும் சம உரிமை மற்றும் சம அந்தஸ்து வழங்கி ஜனநாயகம் மதிக்கப்படும் பன்மைத்துவத்திற்கு சிறந்த உதாரணமான நாடாக கனடா காணப்படுவதோடு, பழங்குடி சமூகத்திற்கு மதிப்பளித்து அரசியலில் உயர் அந்தஸ்து வழங்கியதால் இந்தியாவின் பன்மைத்துவ ஜனநாயகம் வெளிப்படுகின்றது. தேசியவாத சிந்தனை இல்லாமல் போகும்போது பன்மைத்துவம் கட்டியெழுப்பப்படுகின்றது. இலங்கையில் ஆண் ஆதிக்கம் நிறுவனப்படுத்தியுள்ள நிலையில் அரசியலில் முதல் சபாநாயகராக ரோகினி கவிரத்தின என்ற பெண் நியமிக்கப்பட்டிருந்தார். அரசியலில் வன்முறை நிறைந்த கலாசார சூழ்நிலை கிராமப் புறங்களில் குறைவாகவும் நகர்ப்புறங்களில் அதிகமாகவும் காணப்படுகின்றது.

**சிவம் பாக்கியநாதன்...**
(மட்டக்களப்பு விசேட நிருபர்)

# மனஅழுத்தத்தை விரட்டியடிப்பதே மகிழ்ச்சியான வாழ்வுக்கு அத்திவாரம்

**தற்காலத்தில் சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் உள்ள பாரிய பிரச்சினை உளத்தாக்கம் ஆகும். உளத்தாக்கம் காரணமாக தொற்றாநோய்களான நீரிழிவு, உயர்குருதியமுக்கம், கொழுப்பு அதிகரிப்பு, இருதய பாதிப்புக்கள், உடல் பருமன் அதிகரித்தல், நித்திரையின்மை, மனநோய்கள் போன்ற பலவிதமான தாக்கங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன.**

எமது மனத்தை கசக்கிப் பிழிந்து, வாட்டி வதைத்து, எண்ணற்ற சுமைகளை ஏற்படுத்தினால் மென்மையான மனம் எப்படி அமைதியாக இருக்கும்? மனஅழுத்தம் அதிகரிக்க அதிகரிக்க கோபம், பயம், கவலை, சந்தேகம், வெறுப்பு, கவனக்குறைவு, ஆர்வமின்மை, ஊக்கமின்மை, சோம்பல், ஞாபகமறதி போன்ற வெளிப்பாடுகள் உண்டாகி எமது தினசரி வாழ்க்கை பாதிப்பு ஏற்படும். உலகளவில் பரந்து காணப்படும் நோய்களில் மனஅழுத்தம் பெரிய பங்கு வகிக்கிறது என உலக சுகாதார ஸ்தாபனம் கூறியுள்ளது. மனஅழுத்தமானது பாரிய உடல் உளபிரச்சினைகளுக்கு மாத்திரமன்றி, தற்கொலைக்கும் காரணமாகி விடலாம். எனவே உடல் ஆரோக்கியம் போன்றே உள ஆரோக்கியத்திற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

முதலில் மனப்பாரம் குறைய மனம் விட்டு பேசுதல் வேண்டும். அதனை மற்றவர்கள் காது கொடுத்து கேட்பது மிகவும் ஆறுதல் தரக்கூடிய ஒரு விடயமாகும். அதேநேரத்தில் ஒருவரது தனிப்பட்ட பிரச்சினையை மற்றவர்களிடம் பகிர்ந்து தரமிறக்கக் கூடாது. மற்றவர்களுடைய உணர்வுகளுக்கு நாம் மதிப்புக் கொடுக்க வேண்டும். சிறிய பிரச்சினைகளையும் பெரிய பிரச்சினைகளாகக் கருதக் கூடாது.

நாம் பார்க்கும் பார்வையில்தான் சகலதும் உள்ளது. நமது மனதை அமைதியாகவும், தெளிவாகவும் பேணிக் கொண்டு சகல விடயங்களையும் அணுக வேண்டும். நகைச்சுவை உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். சுயநலமின்றி சுயஒழுக்கத்துடனும், செய்தொழிலில் முழு ஈடுபாட்டுடனும் வாழப்பழகிக் கொள்ள வேண்டும். சகல விடயங்களையும் திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். இருப்பதைக் கொண்டு வாழ்வில் திருப்தி காண வேண்டும். பொதுவாக இருப்பதைக் கொண்டு திருப்தி காணாது ஆடம்பரத்தை தேடியலையும் மனிதரில் மனநிம்மதி என்பது ஏற்படாது.

அவ்வாறே நேர்மறையான எண்ணங்களுடன் வாழப்பழகிக் கொள்ள வேண்டும். நேர்மறை எண்ணங்கள் நமது உடலையும், மனத்தையும் உற்சாகமாக வைத்திருக்கும் திறன் பெற்றவை. நேற்று நன்றாக இருந்தேன். இன்று நேற்றை விட நன்றாக இருக்கிறேன். நாளை இன்னும் நன்றாக இருப்பேன் என்ற உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்பது முதுமொழி. சுவாமி விவேகானந்தர் கூட 'என்ன நடந்தாலும் அதை ஏற்றுக் கொள். இன்பம், துன்பம், எது வந்தாலும் மன அமைதியை மட்டும் இழந்துவிடாதே' என்று கூறியுள்ளார். பாரதியார் கூட 'மன உறுதி இல்லாதவனுடைய உள்ளம் ஒரு குழம்பிய கடலுக்கு சமமானது' என்பதுடன் 'மனதில் உறுதி வேண்டும். வாக்கினிலே இனிமை வேண்டும்... என்று கூறியுள்ளதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## உளச்சோர்விலிருந்து விடுபடுவதற்கு இலகுவான வழிகள்






எதையும் வெல்லலாம் என்ற மனத்துணிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு முதலில் மூச்சுப்பயிற்சி, தியானம் போன்ற எளிய யோகப்பயிற்சிகளை இயன்றளவு அதிகாலை மற்றும் இரவு படுக்கைக்கு போகமுன்னர் செய்ய பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இவற்றைக் கடைப்பிடிக்கும் போது வேறு எந்த புலன் பாதிப்புக்களுக்கும் இடம் கொடுக்கக் கூடாது.

'ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்' என்பார்கள். கோபம் என்பது பெரிய நோய். கோபத்தால் செய்யத்தகாத விளைவுகள் இலகுவில் அரங்கேறி விடும். எனவே கோபத்தைக் குறைக்க அன்பு செய்ய பழக வேண்டும். அன்புடன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். அன்பு அதிகமிருந்தால் எதையும் இலகுவில் சாதிக்கலாம் என்ற மனத்துணிவு ஏற்படும்.

ஆரோக்கியமான உடல் கிடைத்தமைக்கு நாம் இயற்கைக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். தாழ்வு மனப்பான்மையை என்றுமே வளர்க்கக் கூடாது. தாழ்வு மனப்பான்மையானது மனச்சோர்வை ஏற்படுத்தி விடும். அதனால் மனஅழுத்தம் ஏற்படும். அதனை தொடர்ந்து உடலிலுள்ள இரசாயன நிலைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு விடும். அதனால் உடல்பாதிப்பு ஏற்படும்.

தனிமை உணர்வை தவிர்க்க வேண்டும். அதே போல தனிமையில் இருப்பதையும் தவிர்த்து அவரவர் மனவிருப்பத்திற்கு ஏற்ப புத்தகங்கள் அல்லது பத்திரிகைகள் மற்றும் நகைச்சுவை துணுக்குகளை வாசித்தல், பஜனைப் பாடல்களை கேட்டலும் அவற்றை பாடுதலும், வானொலியில் பிடித்த விடயங்களை கிரகித்தல், தொலைக்காட்சியில் பிடித்த நிகழ்வுகளை இரசித்தல், படம் வரைதல், கவிதைகள எழுதுதல், நடனமாடுதல், பிடித்தமான சமையலில் ஈடுபடுதல், பூந்தோட்டம் அல்லது வீட்டுத்தோட்டம் அமைத்தல், சிறார்களுடன் இணைந்து விளையாடுதல், தையல் மற்றும் கைவினைப்பொருட்கள் செய்தல், சுற்றுலா செல்லல், கடற்கரை, கோயில், மலைப் பிரதேசங்கள், வயல்வெளிகள் போன்ற இடங்களுக்குச் செல்லல், நண்பர்களுடன் அளவளாவுதல் தன்னலமற்ற சமூக சேவைகளில் ஈடுபடல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் மனஅமைதியையும், புத்துணர்வையும் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் உடல் ஆரோக்கியத்தையும் கவனத்தில் கொண்டு சைக்கிள் ஓட்டுதல், நீந்துதல், வேகமாக நடத்தல், வீட்டிற்குள்ளே நடைப்பயிற்சி, விளையாடுதல் போன்ற உடற்பயிற்சிகளையும் செய்யலாம்.

வளரும் பிள்ளைகளை அன்பாக அரவணைக்க வேண்டும். பெற்றோர் பிள்ளைகளுக்காக தமது நேரத்தை ஒதுக்க வேண்டும். இரவு உணவு வேளையாவது குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து உண்ண நேரம் ஒதுக்க வேண்டும். அந்நேரத்திலாவது குடும்பத்தில் உள்ள பிரச்சினைகளை மட்டுமன்றி சகல விடயங்களையும் ஒளிவுமறைவு இன்றி கலந்தாலோசிக்க வேண்டும். தாய் எப்போதும் பெண் குழந்தைகளுக்கு தோழியாகவும் தந்தை ஆண்குழந்தைகளுக்கு தோழனாகவும் இருக்க வேண்டும். பிள்ளைகளை தாமே சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும். பெற்றோர் தமது விருப்பங்களை பிள்ளைகளுக்கு திணித்து அவர்களை மனஅழுத்தங்களுக்கு தூண்டக் கூடாது.

எதனை செய்யக் கூடாது என்கிறோமோ அதை செய்து பார்க்க முயலுவதுதான் கட்டிளம்பருவத்தின் இயல்பு. எனவே கட்டிளம் பருவத்து பிள்ளைகளை எமது கலாசார பழக்க வழக்கங்களுக்கேற்ப அதிக கட்டுப்பாடுகளை வரையறுத்து அவர்களின் சுதந்திரங்களை அளவுக்கு மீறி கட்டுப்படுத்தாமல் அவர்களை விட்டுப்பிடித்து நன்மை, தீமைகள் பற்றி தெளிவாக விளக்கி அவர்களுடன் மனம் விட்டுப்பேசி அவர்களை சமூகத்திற்கு ஏற்ற வகையில் மனத்துணிவுடன் கூடிய இளைஞர்களாக உருவாக்குவது பெற்றோரின் தலையாய கடமையாகும்.

மேலும் கல்வியை கற்பிக்கும் ஆசிரியர்களும் அவர்களை சரியான முறையில் 'கல்வியின் நிறைவு ஒழுக்கம்' என்பதற்கிணங்க வழிநடத்த வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு' எனும் முதுமொழிக்கு ஏற்ப தொலைபேசி பாவனையை இயன்றளவு குறைக்க வேண்டும். அதேபோலவே தொலைக்காட்சி, வானொலி போன்ற இலத்திரனியல் பாவனைகள் கூட அளவோடு இருக்க வேண்டுமே ஒழிய அவற்றிற்கு நாம் அடிமையாகி விடக்கூடாது.

மனித வாழ்வில் இன்ன துன்பமும் மாற்ற முடியாதது. இன்பத்தில் மகிழ்ந்து துன்பத்தில் துவண்டு விட்டால் வாழ்க்கை நரகமாகிவிடும். இன்பத்திலும் துன்பத்திலும் சிரித்து வாழக்கூடியவனே வாழ்க்கையை அனுபவிக்கின்றான். வாழ்வு என்பது ஒரு முறைதான். அதனை மகிழ்வுடன் வாழ நாம் பழகிக் கொள்ள வேண்டும். ஏன் பிறந்தோம்? ஏன் வாழ்கின்றோம்? ஏன நாமே நம்மை வதைத்து வாழ்வை வீணடிப்பதால் எதனை அடையப் போகின்றோம்?

வைத்திய கலாநிதி
**செல்வி வினோதா சண்முகராஜா**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சித்த மருத்துவ அலகு,

கலாநிதி
**திருமதி கௌரி ராஜ்குமார்**
சிரேஷ்ட விரிவுரையாளர், தாவரவியல் துறை, விஞ்ஞான பீடம்,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

# ஏறாவூர் அருட்திரு. நித்தியானந்தனுக்கு தமிழ்நாட்டில் சிறப்பு கௌரவ விருது

**எழுத்தாளரும், கிறிஸ்தவப் போதகரும், உளவள ஆலோசகருமான அருட்திரு. குழந்தைவேல் நித்தியானந்தன் அவர்களுக்கு தமிழ்நாடு சென்னையில் இயங்கும் பரிவு அறக்கட்டளையினால் 'பரிவு மாமனிதர் விருது_ 2022' அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.**

மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூரைச் சேர்ந்த கிறிஸ்தவ போதகர் நித்தியானந்தன் தமிழ்நாடு சென்னையில் வசித்து வருகின்றார். அவர் இதுவரை பல்வேறு நூல்களை வெளியிட்டுள்ளார். உளவள ஆலோசனைகள் சம்பந்தமான நூல்களையும், கொரோனா தொற்று பற்றிய முழுமையான விபரங்கள் கொண்ட நூலையும் அவர் வெளியிட்டுள்ளார்.

அத்துடன் இந்தியாவின் பல்வேறு பாகங்களிலும் உள்ள பலதரப்பினருக்கும் உளவள ஆலோசனைகளை அவர் வழங்கி வருகின்றார். அதுமாத்திரமன்றி இணையவழியிலும், தொலைக்காட்சி வாயிலாகவும் அவர் உளவள ஆலோசனைகளை மக்களுக்கு வழங்கி வருகின்றார்.

எழுத்தாளர் நித்தியானந்தன் ஆரம்பத்தில் கிழக்கு பல்கலைக்கழகத்தில் சில காலம் பணியாற்றியிருந்தார். அதன் பின்னர் மறைக் கல்வி கற்று போதகர் ஆனார். இலங்கையின் பல பிரதேசங்களில் மறைப்பணியாற்றிய பின்னர் தமிழ்நாட்டுக்குச் சென்று அங்கு போதகராகவும், உளவள ஆலோசகராகவும் நீண்ட காலமாகப் பணியாற்றி வருகின்றார்.

இந்நிலையில் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்ற பரிவு அறக்கட்டளையின் 12 ஆம் ஆண்டு விழா அண்மையில் நடைபெற்ற போது குழந்தைவேல் நித்தியானந்தனுக்கு 'பரிவு மாமனிதர் விருது 2022' வழங்கப்பட்டுள்ளது. அவர் நீண்ட காலமாக சமூகநலப் பணிகளில் ஈடுபட்டு வருவதனால் அவரைக் கௌரவிக்கும் வகையில் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.



பரிவு அறக்கட்டளையின் 12 ஆம் ஆண்டு விழா சென்னை அரும்பாக்கத்தில் உள்ள ஹோட்டல் விஜய் பார்க் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. மாற்றுத்திறனாளிகளின் மேஜிக் ஷோ, நடன நிகழ்ச்சி மற்றும் புல்லாங்குழல் இசையுடன் நிகழ்வு ஆரம்பமானது. முதியோர்களுக்கான நலத்திட்ட உதவிகளுடன் இந்நிகழ்வு இனிதாக நடைபெற்றது.

பரிவு அறக்கட்டளையின் சார்பில் நித்தியானந்தன் அவர்களுக்கு 'பரிவு மாமனிதர் விருது 2022' என்ற விருதை நீதியரசர் வள்ளி நாயகம்வழங்கி கௌரவித்தார்.

மணிலால்(Lion's Club),மணிகண்ணன் (Adiyoghi Medical Group), ஜரூக் ஷா(The Grand Squre Mall), திருமதி தாஹிரா பானு(Inspector of Police) மற்றும் பரிவு அறக்கட்டளை நிறுவனர் பரிவு Dr. S. சக்திவேல் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர். மேற்படி விழாவில் சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.






முட்டை, பால், இறைச்சி விலையுயர்வு;

# கால்நடைத் தீவனமான சோளம் உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடு

**எமது நாட்டில் சோளச்செய்கையின் விளைச்சல் அன்மைக் காலமாக பாதிக்கப்பட்டுள்ளதால் கால்நடைகளின் உணவுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. கால்நடைகளின் உணவாக பயன்படுத்தப்படும் சோளத்திற்கு நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் பற்றாக்குறை காரணமாக பால், முட்டை மற்றும் கோழி இறைச்சி ஆகியவற்றின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளன. இதனால் நுகர்வோர் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதுடன் பண்ணையாளர்களும் தமது தொழில் முயற்சியினை மேற்கொள்ள முடியாமல் உள்ளனர்.**


அநுராதபுரம் அரச அதிபர்

அதனை கருத்தில் கொண்டு இம்முறை பெரும்போகத்தின் போது நாட்டில் 60,000 ஹெக்டயர் நிலப்பரப்பில் சோளம் பயிரிடுவதற்கு விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கமைவாக சோளப் பயிர்ச்செய்கையை செய்கை பண்ண விரும்பும் செய்கையாளர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் நாடு பூராவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இறக்குமதிக்கு போதிய அந்நிய செலாவணி இல்லாததாலும் சோளம் விளையும் நாடுகள் தங்கள் பொருட்களை ஏற்றுமதி செய்யாததாலும் கால்நடைகளுக்கான உணவு பற்றாக்குறை நிலவுவதாக விவசாய அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் எமது நாட்டுக்கு தேவையான சோளத்தை பயிரிடுவதைத் தவிர வேறு வழியில்லை. பெரும்போகத்தில் மேற்கொள்ளப் படவுள்ள சோளச்செய்கைக்கு தேவையான முழு விதைகளையும் வழங்க விவசாய விதை உற்பத்தியாளர்கள் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சு தகவல்கள் தெரிவித்தன.அதற்கமைவாக அநுராதபுரம் மாவட்டத்திலும் இம்முறை பெரும்போகத்தின் போது 45,000 ஹெக்டயர் நிலப் பரப்பில் சோளச்செய்கையினை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் ஜனக ஜயசுந்தர தெரிவித்தார்.

மாவட்டத்தின் ஹொரவபொத்தான,மஹவிளச்சிய, திறப்பனை, கஹட்டகஸ்திகிலிய, கலன்பிந்துனுவெவ, மதவாச்சி, கெப்பித்திகொள்ளாவ, பதவிய, ராஜாங்கனை, மத்திய நுவரகம்பளாத்த, மிஹிந்தலை உள்ளிட்ட பகுதிகளில் பாரிய அளவில் சோளச் செய்கையினை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலக தகவல்கள் தெரிவித்தன.

நாட்டில் சோளச்செய்கையினை அதிகரித்து விளைச்சலை அதிகரிப்பதன் மூலம் நாட்டுக்குத் தேவையான சோளத்தினை பெற்றுக் கொள்ள முடியும். கடந்த 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இரசாயன உரத்திற்கான தட்டுப்பாடு காரணமாகவே சோளச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன் அறுவடையும் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**ஏ.பிர்தௌஸ்...**
(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

'உணவற்றோருக்கு உணவு' வேலைத் திட்டம்

# கிண்ணியா பிரதேச இளைஞர் குழுவொன்றின் மனிதாபிமான பணிக்கு குவியும் பாராட்டுகள்!

**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினை காரணமாக 'உணவற்றோருக்கு உணவு' எனும் வேலைத் திட்டம் கிண்ணியாவிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த வேலைத் திட்டத்தை கிண்ணியாவின் மனிதநேய சிந்தனையுள்ள இளைஞர்கள் ஒன்றிணைந்து ஆரம்பித்து வைத்துள்ளனர். தற்போது ஒரு வாரம் பூர்த்தியாகி இருக்கின்ற தறுவாயில் இத்திட்டமானது பிரதேசத்தைத் தாண்டி அமோக வரவேற்பை பெற்றுள்ளதோடு வசதி படைத்தவர்களிடம் இருந்து நன்கொடைகளும் கிடைக்கப் பெற்ற வண்ணமுள்ளன.**

பொருளாதாரப் பிரச்சினை காரணமாக உணவின்றி தவிக்கும் ஏழை மக்களுக்காக உணவினை வழங்கும் நோக்கில் இத்திட்டம் நாடளாவிய ரீதியில் பல இடங்களில் நடைபெற்று வருகின்றது. கிண்ணியாவில் இத்திட்டத்தில் முழுமையாக படித்து முடித்த இளைஞர்கள் சிலர் பங்கேற்றிருப்பது மக்கள் மத்தியில் பெரிதும் வரவேற்பைப் பெற்றுள்ளது. சமூக ஊடகங்களிலும் இதற்கான பாராட்டுகள் குவிந்துள்ளன.

குறித்த வேலைத் திட்டத்தின் ஊடாக கிண்ணியா குட்டிக்கராச்சியில் பொது இடமொன்றில் சந்தை போன்ற அமைப்பில் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.

தற்போதைய பொருளாதார நெருக்கடியான சூழலில் உணவின்றி தவிக்கும் மக்கள் குறித்த இடத்திற்கு வருகை தந்து தங்களுக்குத் தேவையான பொருட்களை பெற்றுச் செல்ல முடியும் என்று ஏற்பாட்டாளர்களான இளைஞர்கள் தெரிவிக்கின்றனர். அத்தியாவசிய பொருட்களை நன்கொடையாக வழங்கக் கூடியவர்கள் அவ்விடத்திற்கு வருகை தந்து பொருட்களை வழங்க முடியும் என அந்த இளைஞர்கள் குறிப்பிடுகின்றனர்.





இவ்விடத்தை பார்வையிடுவதற்கும் உதவிகளை வழங்குவதற்கும் பலர் வருகை தந்த வண்ணமிருக்கின்றனர். தற்போது இத்திட்டத்தின் மூலம் வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற அத்தியாவசிய உணவுகளின்றி கஷ்டத்தை எதிர்கொள்ளும் மக்கள் பாரிய நன்மை அடைந்து வருகின்றனர்.

அதேவேளை, இத்திட்டத்தை கிண்ணியாவின் பல பிரதேசங்களிலும் ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.அது மட்டுமன்றி, கிண்ணியாவின் அயல் பிரதேசங்களிலும் இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அந்த வகையில் கிண்ணியாவின் அயல் பிரதேசமான கந்தளாய் பிரதேசத்திலுள்ள சமூகத் தலைவர்களும் இவ்விளைஞர்களினால் கவரப்பட்டு அவ்வாறானதொரு வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

மனிதநேய சிந்தனையுள்ள சில இளைஞர்களின் சிந்தனைக் கருவில் உதித்த இத்திட்டமானது தற்போதைய பொருளாதார நெருக்கடிமிக்க சூழலில் பல ஏழை மக்களின் வயிற்றுப் பசியைத் தீர்த்திருக்கின்றமை பாராட்டத்தக்க விடயமாகும்.

இளைஞர்களென்றால் சந்தியில் அமர்ந்து அரட்டையடிக்கின்ற கலாசாரம் முற்றுப் பெற்று ஆக்கபூர்வமான விடயங்களிலும் அவர்களால் பங்கெடுக்க முடியும் என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும் என சமூக ஆர்வளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

**இர்ஷாத் இமாமுதீன்...**
(கிண்ணியா தினகரன் நிருபர்)

## நுரைச்சோலை மீள ஆரம்பம்... (03ஆம் பக்கத் தொடர்)

கட்டமைப்புடன் இணைக்கப்பட்டதோடு 300 மெகாவொட் மின்சாரம், தேசிய கட்டமைப்புக்கு இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, கடந்த 15ஆம் திகதி முதல் நாடு முழுவதும் 03 மணி நேர மின்தடை அமுலாக்கப்பட்டு வருகிறது. இவ்வாறான, பின்னணியில், மின்தடை அமுலாக்கப்படும் காலம் தொடர்பில் அறியப்படுத்துமாறு மின்சார சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளதோடு மின்துண்டிப்பு கால அளவில் திருத்தம் செய்து விரைவில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு அறியப்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வன்னாத்திவில்லு ... (03ஆம் பக்கத் தொடர்)

வன்னாத்திவில்லு இஸ்மாயில்புரம் கிராமத்துக்குள் தப்போவ சரணாலயத்திலிருந்து வந்த மூன்று காட்டு யானைகள் நகரின் அனைத்துப் பகுதிகளிலும் சுற்றித் திரிந்து பெருமளவிலான சொத்துக்களுக்கு சேதம் விளைவித்துள்ளதுடன் இளைஞர் ஒருவரையும் தாக்கியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

வன்னாத்திவில்லு இஸ்மாயில்புரம் கிராமத்துக்குள் நேற்று முன்தினம் (27) அதிகாலை 2.30 மணியளவில் காட்டு யானைகள் உற்புகுந்து தென்னை மரங்கள், வாழை மரங்களை துவம்சம் செய்துள்ளன. இந்த நிலையில் கிராம மக்கள் கடும் பிரயத்தனத்துக்கு மத்தியில் யானைகளை விரட்டிய போதும் காட்டு யானையொன்று (27) மாலை மீண்டும் கிராமத்திற்குள் புகுந்த வேளை யானைகளை விரட்டுவதற்கு இளைஞர் ஒருவர் முற்பட்டபோது யானை இளைஞரை தாக்கியுள்ளது.

இதன்போது படுகாயங்களுக்குள்ளாகிய இளைஞரை உடனடியாக அங்கிருந்தவர்கள் புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளதுடன் அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

## சுவிட்சர்லாந்து நகரில்... (03ஆம் பக்கத் தொடர்)

எடுக்கப்பட்ட இரத்தினக்கற்கள் மூன்று மாதங்களுக்குள் மீளக் கொண்டுவரப்பட வேண்டும். ஆனால் இந்த இரத்தினக்கல்லை சுவிட்சர்லாந்தில் வைக்க கூட்டுத்தாபனம் கால அவகாசத்தை நீடித்துள்ளது.

## மாசடைந்த கடற்கரையை ... (03ஆம் பக்கத் தொடர்)

கடற்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் வழக்கறிஞர் தர்ஷனீ லஹந்தபுர தெரிவித்தார். அந்த நிறுவனத்திடமிருந்து அறிவுறுத்தல்கள் கிடைத்த பின்னர், சட்ட மாஅதிபர் திணைக்களத்துடன் இணைந்து மேலதிக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார். இச்செலவுகளுக்குரிய கொடுப்பனவுக்காக ரூபா 90,38,57,293 திறைசேரியிலிருந்து பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவைப் பத்திரம் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தொடர்ந்தும் தெரிவித்தார். அதே போன்று கடல் அடியில் மூழ்கியுள்ள எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலை கரை சேர்க்கும் பணிக்காக கப்பல் நிறுவனத்தால் சீன நிறுவனம் ஒன்றுக்கு பொறுப்பு வழங்கப்பட்டிருப்பதாக கடல் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார். அத்தோடு சீன நிறுவனம் கடந்த காலத்தில் இலங்கைக்கு வந்து கப்பலை கரைசேர்க்கும் பணியை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார். எனினும் பருவப் பெயர்ச்சிக் காலத்தில் கடல் கொந்தளிப்பாக இருப்பதால் கப்பலை கரை சேர்க்கும் பணி தற்போது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் இந்த வருடம் நவம்பர் மாதத்தில் அந்த வேலைகள் மீள ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

எம்.வீ. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து பரவிய கழிவுப் பொருட்கள் காரணமாக மாசடைந்த கடற்கரைப் பகுதியை சுத்திகரிக்கும் பணி கடந்த வருடம் மே மாதம் 20 ஆம் திகதியில் இருந்து இன்று வரை செய்யப்பட்டுக் கொண்டு வருகிறது.

## பேராதனை பல்கலை ... (03ஆம் பக்கத் தொடர்)

தற்போது பொறியியல் பீடத்தில் பரீட்சைகள் நடைபெறுவதாகவும் கடந்த 26 ஆம் திகதி பரீட்சைக்கு தோற்றிய பின் மாணவன் வீட்டுக்கு சென்று தனது நண்பர்களுக்கும் மூன்று உணவு பார்சல்களை கொண்டு வந்ததாகவும் பேராசிரியர் தெரிவித்துள்ளார். பாலத்துக்கருகில் கண்டுபிடிக்கப்பட்ட பையில் அந்த உணவு பார்சல்கள் காணப்பட்டுள்ளன. இம்மாணவன் மன அழுத்தத்துக்கான மருந்துகளை பெற்றுக் கொள்பவர் என்ற தகவலும் தெரிய வந்துள்ளது.

## சொகுசு வாகனமொன்றில்... (03ஆம் பக்கத் தொடர்)

கடத்தலுக்காக பயன்படுத்தப்பட்ட சொகுசு கார் என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த சோதனை நடவடிக்கையின் போது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி வேவிட விதான ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்னாயக்க தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர்களான எச்.ஜி.பி.கே நிஸ்ஸங்க உள்ளிட்ட பொலிஸ் சார்ஜண்ட்களான பண்டார (13443) செனவிரட்ன (38499) பொலிஸ் கன்ஸ்டபிள்களான நிமேஸ்(90699)பெரேரா (71664) பிரேமதாச (35808)சாரதி ஜெயரட்ன (19786) அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்தனர். பின்னர் கைது செய்யப்பட்ட நபர்கள் சான்று பொருட்களுடன் பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தினர். கடத்தலுக்காக பயன்படுத்தப்பட்ட சொகுசு கார் என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## வத்தளையில்...

வந்த இரண்டு சந்தேகநபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடத்தப்பட்ட இளைஞரின் சொகுசு வாகனம் ஜாஎல பகுதியிலுள்ள வணிக வளாகத்துக்கருகில் கைவிடப்பட்டிருந்தமை சிசிடிவி காட்சிகளில் பதிவாகியுள்ளது. வர்த்தகரான தனது தந்தையிடமிருந்து கப்பம் பெறும் நோக்கில் இளைஞன் கடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞரை விடுவிக்க 53 இலட்சம் ரூபா பணம் கோரப்பட்டுள்ளது. பின்னர், இதுபற்றி பொலிஸாருக்கு தகவல் அளித்த தந்தை, மிரட்டல் விடப்பட்டவர்கள் கூறியபடி அவர்களது வங்கிக் கணக்கில் பணம் வைப்பிலிடப்பட்டது.

பின்னர், கடத்தப்பட்ட இளைஞரை முச்சக்கரவண்டியில் அழைத்து வந்து இறக்கிய போது, இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பணம் செலுத்திய சந்தேக நபர்களின் வங்கிக் கணக்கை முடக்கி மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில் மேலும் பல சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், இந்த கடத்தலில் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை கைது செய்ய மேற்கு குற்றப்பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் மற்றும் வடமேற்குக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் தலைமையில் பல பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## அத்துமீறி மீன்பிடித்த...

(03ஆம் பக்கத் தொடர்)

பயன்படுத்திய இழுவைப் படகும் கைப்பற்றப்பட்டுள்ளது. இவ்வாறு கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 06 பேரும் நேற்று ஞாயிற்றுக்கிழமை (28) காலை தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் மன்னார் மாவட்ட கடற்றொழில்திணைக்களஅதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ரணில்...

ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

கட்சியின் ஜனாதிபதி ஒருவரின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை மாநாட்டை 28 வருடங்களுக்குப் பின்னர் நடத்தவுள்ளது. ஐக்கிய தேசிய கட்சி ஜனாதிபதி ஒருவரின் கீழ் 1993 ஆம் ஆண்டே இறுதியாக வருடாந்த கூட்டமொன்றை நடத்தியுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் 76 ஆவது ஆண்டு நிறைவு கூட்டம் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜயவர்த்தன தலைமையிலான குழுவால் ஏற்பாடு செய்யப்படுவதோடு, அதற்கு இணைந்ததாக செப்டம்பர் 04 ஆம் திகதி நாடு முழுவதுமுள்ள அனைத்து தேர்தல் தொகுதிகளிலும் மத வழிபாட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

## தமிழருக்கு தீர்வை வழங்காது ...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் அரசியல் தீர்வு விடயம் சம்பந்தமாக அரசுடன் மாத்திரமன்றி ஏனைய தரப்புக்களுடனும் பேசியிருக்கின்றோம். இது தொடர்பான எமது நடவடிக்கை தொடர்கின்றது என்றும் அவர் கூறினார்.

நாட்டின் தேசிய பிரச்சினைகளில் அரசியல் தீர்வு விடயம் முக்கியத்துவம் பெறுகின்றது. வடக்கு கிழக்கு தமிழ்பேசும் மக்களின் சரித்திர ரீதியான தாயகம். வடக்கு கிழக்கு மாகாணங்கள் அவர்களின் வதிவிடப் பிரதேசம். எனவே, தமிழ்பேசும் பிரதேசம் ஒன்றிணைந்த வடக்கு கிழக்கில் அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம். இந்தக் கருத்து எல்லோராலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வலியுறுத்தப்பட்டு வருகின்றது. ஆனால், அது சில காரணங்கள் நிமித்தம் இழுபடுகின்றது.

மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் இந்த விடயம் தொடர்பில் காலத்தைக் கடத்துகின்றன. இதை இனியும் அனுமதிக்க முடியாது.

காலம் தாழ்த்தாமல் தமிழ்பேசும் மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். இது தொடர்பில் அனைத்துத் தரப்பினருடனும் நாங்கள் தொடர்ந்து பேசுவோம். இந்த விடயத்தில் அரசு அதிக கவனம் செலுத்த வேண்டுமென கூறியுள்ளார்.

## பெற்றோல், டீசல், ...

உற்பத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் உள்ளிட்ட அனைத்து எரிபொருட்களும் சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அத்துடன், இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருட்களும் கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல எரிபொருள் களஞ்சிய முனையங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எனவே, எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பான வதந்திகளை நம்ப வேண்டாம் எனவும் அக்கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

## அமைச்சர் நஸீர் அஹமட்...

பிரதிநிதியாகச் சென்ற அமைச்சர் சவூதியின் தலைநகர் ரியாதுக்குச் சென்றார். மன்னர் காலித் சர்வதேச விமான நிலையத்தில் அமைச்சருக்கு விஷேட வரவேற்பளிக்கப்பட்டது. சவூதி அரேபிய வெளிநாட்டமைச்சின் பணிப்பாளர் நாயகம் மஜீட் எஸ்பின் ஷொவ்லி மற்றும் சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஹம்ஸா ஆகியோர் அவரை வரவேற்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விஷேட பிரதிநிதியாகச் சென்றுள்ள அமைச்சர், சவூதியின் முக்கிய உயர்மட்ட பிரமுகர்களைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

## 01 இலட்சத்து 71...

அமைய ஒரு இலட்சத்து 71 ஆயிரத்து 497 பேர் பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இந்த பரீட்சை கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்றது.கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கு 2 இலட்சத்து 72 ஆயிரத்து 682 பரீட்சாத்திகள் தோற்றியிருந்தனர். அவர்களில் 49 பரீட்சாத்திகளின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்துள்ளார். பரீட்சை பெறுபேறுகளை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk/exam results என்ற இணையதளத்தில் பார்வையிடலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். சகல பாடசாலை பரீட்சாத்திகள் மற்றும் தனிப்பட்ட பரீட்சாத்திகளும் பரீட்சை சுட்டெண் அல்லது தமது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உட்படுத்தி தமது பெறுபேறுகளை பார்வையிட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சாத்திகளின் எண்ணிக்கை 2,72,682பேர். இவர்களில் 2,36, 035 பேர் பாடசாலை பரீட்சாத்திகளாவர். மேலும் 36 ஆயிரத்து 647 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். அத்துடன் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோரின் எண்ணிக்கை 1,71,497 ஆகும். இவர்களில் பாடசாலை பரீட்சாத்திகள் ஒரு இலட்சத்து 49 ஆயிரத்து 946 பேர் என்றும் தனிப்பட்ட பரீட்சாத்திகள் 21,551 பேர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதே வேளை, பாடசாலை பரீட்சாத்திகள் 37 பேர் மற்றும் தனிப்பட்ட பரீட்சாத்திகள் 12 பேரதும் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை இம்முறை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 2022 ஆம் ஆண்டுக்கான உயர்தர பரீட்சைக்கு மீள தோற்ற வேண்டுமானால் எதிர்வரும் முதலாம் திகதி முதல் எட்டாம் திகதி வரை ஒன்லைன் மூலம் விண்ணப்பிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## SJB சிரேஷ்ட...

பதவிகளை வகித்தவர்களெனவும், சர்வகட்சி அரசாங்கத்துக்குப் பதிலாக அனைத்துக் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் தேசிய அரசாங்கத்தை நிறுவுவதற்கு அரசாங்கம் தற்போது தயாராகி வருகின்றது.

இதன்படி, கட்சிகளாக இல்லாது தனிப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாக, பல கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து, அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளைப் பெறவுள்ளதாக கூறப்படுகிறது.

## சர்வதேச நாடுகளை...

மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க ஐக்கிய அரபு ராஜ்ஜியம், சவூதி அரேபியா, அமெரிக்கா, சீனா, இந்தியா, ரஷ்யா, இங்கிலாந்து, மலேசியா, நோர்வே, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 24 நிறுவனங்களே அதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். எரிசக்தி மின்சக்தி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழு இந்த முன்மொழிவுகள் மற்றும் யோசனைகளை மதிப்பீடு செய்து கோரிக்கை விண்ணப்பங்களை முன்வைக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் அந்த செயற்பாடுகள் ஆறு வாரங்களுக்குள் நிறைவு செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். பெற்றோலிய பொருட்களை விநியோகிப்பதற்கு பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு நீண்ட கால ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்வது தொடர்பில் அதன் விருப்பத்தினை அண்மையில் மின்சக்தி எரிசக்தி அமைச்சு பகிரங்க அறிவித்தல் மூலம் வெளியிட்டிருந்தது.

அதற்கிணங்க எரிபொருள் சில்லறை விற்பனை செயற்பாடுகளுக்காக 500 முதல் 700 வரையான எரிபொருள் நிலையங்களை சர்வதேச நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த நான்கு மாதங்களுக்கு நாட்டிற்கான எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என்ற அடிப்படையிலேயே எரிபொருள் நிலையங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட உள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த வெளிநாட்டு நிறுவனங்களில் சீனாவின் சினோ பேக் நிறுவனம் மற்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஷெல் நிறுவனம் ஆகியவற்றின் முன்மொழிவுகளும் மின்சக்தி எரிசக்தி அமைச்சுக்கு கிடைத்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நான்கு நிறுவனங்களுக்கு எரிபொருள் நிலையங்களை வழங்குவது தொடர்பில் மின்சக்தி எரிசக்தி அமைச்சு உத்தேசித்துள்ள நிலையில், அவ்வாறு எரிபொருள் நிலையங்களை பொறுப்பேற்கும் சர்வதேச நிறுவனங்கள் எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகம் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## சஜித்தின் சகோதரி...

அவர் அங்கு இருந்ததாக கிடைத்த தகவலின் படி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அண்மையில் அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இந் நிலையிலேயே சஜித் பிரேமதாசவின் சகோதரி ஸ்ரீலங்கன் ஏர் லைன்ஸ் விமானத்தில் தனது இரண்டு பிள்ளைகளுடன் நாட்டை விட்டு வெளியேறியுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த மாதம் அரசுக்கு எதிராக இடம்பெற்ற போராட்டத்தின் போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட வீடு ஆர்ப்பாட்டக்காரர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முறையற்ற முறையில்...

வெவ்வேறு பொருட்களை இறக்குமதி செய்வதற்கான நாணய பரிமாற்றம் உள்ளிட்டவை தொடர்பில் ஆராயப்படவுள்ளன. இதன் காரணமாக முறையற்ற விதத்தில் வெளிநாட்டு நாணயத்தை பெறவோ, செலுத்தவோ வேண்டாமென பொலிஸார் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.

அத்துடன் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை விரிவுப்படுத்தவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சர் டக்ளஸின்...

மாகாண சபைகளுக்கான இடைக்கால நிர்வாக கட்டமைப்பை உருவாக்க வேண்டுமெனும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பை நாட்டிலுள்ள தமிழ் ஆர்வலர்கள், தமிழ் புத்திஜீவிகள், அரசியல் விமர்சகர்கள், மதப் பெரியார்கள் மற்றும் சமூக அமைப்புகளின் முக்கியஸ்தர்கள் பெரிதும் பாராட்டி வரவேற்றுள்ளனர்.

அமைச்சர் டக்ளஸ் எடுத்துள்ள இந்த அறைகூவலை இனியும் காலம் தாழ்த்தாது உடனடியாக அமுல்படுத்த வேண்டிய பொறுப்பு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் சாருமென அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே இந்த முயற்சியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்தும் ஈடுபட்டு அனைவரையும் ஒன்றிணைத்து ஒரு உயர் குழுவை அமைத்து, அதன் மூலம் ஒரு தீர்மானத்தை எடுத்து தமிழ் மக்களுக்கு அது குறித்து விளக்கமூட்டி அதனை அரசாங்கத்தின் முன்பாக சமர்ப்பிக்க வேண்டுமெனவும் இவர்கள் அனைத்து தமிழ் கட்சிகளின் தலைமைகளையும் கேட்டுள்ளனர்.

வெளிநாட்டு தூதுவர்களை மற்றும் சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளை தனித்தனியே அல்லது குழுக்களாக தமிழ் கட்சிகள் சில சந்தித்து பேசி வருவதால் எந்த பலனும் இல்லை. அவை வெறுமனே ஊடகங்களுக்கு செய்திகளாக மட்டுமே பிரயோசனப்படுத்தப்படும்.

யுத்த காலத்திலும் சரி யுத்தம் முடிவடைந்த கடந்த 10 வருட காலத்திலும் இந்த நிலைமையைத்தான் நாங்கள் கண்டு வருகின்றோம்

இது தமிழ் கட்சிகள் தமக்கு வாக்களித்த தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற ஒரு செயலாகவே நோக்கப்படுகிறது. இனியும் இந்தப் பருப்பு வேகாது எனும் அளவுக்கு தமிழ் மக்கள் இத்தகைய விடயங்களில் வெறுத்துப் போய் உள்ளனர்.

ஆகவே இந்த பொய்யான பரப்புரைகளை விடுத்து தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து புதிய வேலைத்திட்டத்தில் இறங்க வேண்டும். அது அமைச்சர் தேவானந்தா தலைமையில்தான் இருக்க வேண்டுமென்று இல்லை.

அவரையும் இணைத்து எல்லோரும் இணைந்து செயல்படுவதன் மூலம் தமிழ் மக்களுக்கு எதிர்காலத்தில் சிறந்த ஒரு தீர்வு கிட்டுமென தெரிவித்துள்ள புத்திஜீவிகள் பலரும், அதற்கான ஒரு நல்ல சந்தர்ப்பமாக தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி வகிக்கிறார் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## அடுத்த மாதம் முதல்...

மாதம் முதல் ஆரம்பிக்க எண்ணியுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ கூறியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். எயார் இந்தியா விமான சேவையின் விமானத்தில் 75 முதல் 90 ஆசனங்கள் வரை இருக்கும்.

இந்திய சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் இலங்கைக்கு அழைத்து வருவது இதன் நோக்கம் எனவும் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து யாழ்ப்பாணம் பலாலி சர்வதேச விமான நிலையத்துக்கான விமான சேவைகளை ஆரம்பிக்க இலங்கை அதிகாரிகள் உத்தேசித்திருந்தனர்.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் 17 ஆம் திகதி சென்னை சர்வதேச விமான நிலையத்திலிருந்து வந்த எயார்லைன்ஸ் எயார் விமானம் பலாலி விமான நிலையத்தில் முதலில் தரையிறங்கியது. இதனையடுத்து சர்வதேச வர்த்தக விமான சேவைகளுக்கான விமான நிலையமாக பலாலி விமான நிலையம் திறக்கப்பட்டது.

## புலம்பெயர் அமைப்புகளுடன்...

புலம்பெயர் தமிழர் அமைப்புகளுடன் டெலிகொன்பரன்ஸ் முறை மூலம் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட பின்னர் புலம்பெயர் தமிழர் பிரதிநிதிகள் எழுப்பிய கரிசனைகள் குறித்து தீர்வை காண்பதற்காக நீதியமைச்சர் விஜயதாச ராஜபஷ முன்னாள் பிரதம நீதியரசர் அசோக் டி சில்வா தலைமையில் மூவர் கொண்ட குழுவை நியமித்துள்ளார்.

கனடாவை சேர்ந்த நீதி மற்றும் சமத்துவத்துவத்துக்கான கனடா அமைப்பினருடன் நீதி அமைச்சர் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார், அவுஸ்திரேலியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் புலம்பெயர் அமைப்புகளுடனும் அமைச்சர் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இலங்கையில் குறிப்பிட்ட காலம் தடுத்துவைக்கப்பட்டிருந்த பின்னர் விடுதலை செய்யப்பட்ட ரோய் சமாதானம் என்பவர் தலைமையிலான கனடா அமைப்புடன் நீதி அமைச்சர் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார். தமிழ் அரசியல் கைதிகளை விரைவில் விடுதலை செய்யவேண்டும், வடக்கு,கிழக்கில் தமிழர்கள் துன்புறுத்தப்படுவதற்கு முடிவு காண வேண்டுமென்ற இரண்டு முக்கிய கோரிக்கைகளை புலம்பெயர் தமிழர் அமைப்புகள் முன்வைத்துள்ளன. சமூகங்களுக்கு இடையிலான நல்லுறவை வலுப்படுத்தவேண்டுமெனவும் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

புலம்பெயர் சமூகத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதை உறுதி செய்துள்ள நீதி அமைச்சர் அவர்களுடைய கரிசனைகளை கவனமாக செவிமடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார். இதன் பின்னர் மூவரடங்கிய குழுவை நியமித்துள்ளதாகவும் அந்த குழுவை வெள்ளிக்கிழமை சந்தித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்த விடயத்துக்கு தீர்வை காண்பதற்கான பொறுப்பை அடுத்த தலைமுறைக்கு வழங்க கூடாது துயரங்களுக்கு விரைவில் தீர்வை காண்பதற்கான நாட்டை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளைமேற்கொள்ளவேண்டுமெனவும் நீதியமைச்சர் தெரிவித்துள்ளார். வடக்குகிழக்கில் நிலங்களை படையினர் பலவந்தமாக ஆக்கிரமித்துள்ள விடயம் குறித்தும் புலம்பெயர் தமிழர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## கோதுமை மாவின் ...

இரண்டு பிரதான நிறுவனங்களிடமிருந்தும் நாளாந்த தேவையில் 25% மாத்திரமே சந்தைக்கு வெளியிடப்படுவதாக சங்கம் கூறியுள்ளது.

இந்தியா தற்காலிகமாக ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளதையடுத்து அங்கிருந்து இலங்கைக்கு மாவை கொண்டு வரும் வர்த்தகர்கள் மாவின் விலையை 350 ரூபாவாக உயர்த்தியுள்ளனர்.

இந்த செயற்பாடு வருந்தத்தக்கதென தெரிவித்த சங்கத்தினர், இந்நிலை தொடர்ந்தால் பான் 250 முதல் 300 ரூபாவுக்கு வாங்க வேண்டிய நிலை ஏற்படுமென எச்சரித்துள்ளது.

## அதிர்ச்சியில் காதலி...

தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நீரில் மூழ்கி காணமல் போன யுவதியை (27) தேடும் நடவடிக்கையின் போதே அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது. மாத்தறை, பிடபெத்தர, நில்வலா கங்கையில் நீராடச் சென்று காணாமல் போன நான்கு இளைஞர்களில் மூவரின் சடலங்களை கடற்படையின் சுழியோடிகளின் உதவியுடன் (27) கண்டுபிடித்தனர்.

எனினும் காணாமல் போன மனுஷ்க யோஹான் என்ற இளைஞரை தேடி தொடர்ந்து தேடுதல் நடவடிக்கைகள் நடத்தப்பட்டு வருகின்றது.

## இலங்கையில் பயிற்சி...

இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் அனுசரணையுடன், இலங்கையின் வெலிசரயிலுள்ள சர்வதேச சுகாதார விஞ்ஞான நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற தாதியரின் முதல் தொகுதி இதுவாகும். நியமனக் கடிதங்களைப் பெற்றவர்களை வாழ்த்திப் பேசிய அமைச்சர் அலி சப்ரி, மிகவும் அபிவிருத்தியடைந்த சுகாதார அமைப்பில் ஒரு சிறந்த தொழிலை நோக்கிய அவர்களது பயணம் இப்போதுதான் தொடங்கியுள்ளதாகவும், அக்கறையுள்ள இலங்கை நிபுணர்கள் என்ற பிம்பத்தைக் கட்டியெழுப்புவதில் எமது நாட்டின் பிரதிநிதிகளாக இருப்பதற்கு அவர்களுக்கு அழைப்பு விடுத்தார். 'உங்கள் வெற்றிகரமான தொழில், எதிர்காலத்தில் இலங்கைக்கான மேலதிக வாய்ப்புக்களை உறுதி செய்யும். உங்களின் நிபுணத்துவம் மற்றும் பயிற்சியின் மூலம், ஐக்கிய இராச்சியத்தில் எமது நற்பெயரை தொடர்ந்தும் மேம்படுத்துவீர்கள் என்று நான் நம்புகின்றேன்' என அமைச்சர் மேலும் தெரிவித்தார். வெளிநாட்டு நாணயங்களை அனுப்பும் தொகையை அதிகரிப்பதற்கான அனைத்து வழிகளையும் நாடு ஆராய்ந்து வரும் வேளையில், இலங்கை இளைஞர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு இது வழிவகுக்கும் என்பதை சுட்டிக்காட்டி, சுகாதாரக் கல்வி மற்றும் பயிற்சித் துறையில் தொலைநோக்குப் பார்வையுடன் ஈடுபட்டுள்ள சர்வதேச சுகாதார விஞ்ஞான நிறுவனம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள அதன் இணை நிறுவனங்களுக்கும் அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, நியமனக் கடிதங்களைப் பெற்றவர்கள் மற்றும் இத்திட்டத்துடன் தொடர்புடைய ஏனைய பங்குதாரர்களை ஊக்குவித்தார். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில், சர்வதேச சுகாதார விஞ்ஞான நிறுவனத்தின் ஸ்தாபகர் கலாநிதி நிஹால் டி சில்வா, சர்வதேச சுகாதார விஞ்ஞான நிறுவனத்தின் இணை நிறுவனர் கலாநிதி கித்சிறி எதிரிசிங்க மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## 33 கிலோ போதைப் பொருள்...

அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி சுமார் 23 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

பேலியகொட பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து போதைப் பொருளுடன் 30 இலட்சம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அந்த பிரிவு தெரிவித்தது.

ஒரு கிலோ கொக்கெய்ன் 24 கிலோ மற்றும் 500 கிராம் ஐஸ் 8 கிலோ குஷ் போதைப் பொருட்களே பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# நானுஓயாவில் தீ விபத்து வீடு, உடமைகள் முற்றாகச் சேதம்

நானுஓயா எடின்பிரோ தோட்டத்தில் நேற்றிரவு இடம்பெற்ற தீ விபத்துச் சம்பவமொன்றில், வீடொன்றும் அவ்வீட்டிலிருந்த உடமைகளும் முற்றாக எரிந்து சாம்பலாகியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்

மின்சார கசிவு காரணமாக திடீரென இங்கு தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இச்சம்பவத்தின்போது, இரு பிள்ளைகள் உட்பட தாயும் இருந்துள்ளனர்.எனினும், இவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். இந்த தீ விபத்தில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும்,வீட்டில் இருந்த அனைத்து பொருட்களும் எரிந்து நாசமானதாகவும்



நானுஓயா பொலிஸார் தெரிவிக்கின்றன.

வீட்டில், தீ பற்றி எரிவதை அறிந்துகொண்ட அயலவர்கள், உடனடியாக பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.இதையடுத்து நுவரெலியா மாநகர சபையிலிருந்து தீயணைப்புப் படையினர் வரவழைக்கப்பட்ட போதிலும்,பாதை வசதிகளின்றி,

வீட்டுக்கருகில் வர முடியாமல் போனது.எனினும் சுமார் மூன்று மணித்தியாலங்களுக்குப் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

# விரைவில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் இளைஞர்,யுவதிகளுக்கு வாய்ப்பு





**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

விரைவில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத்தேர்தலில்,இளைஞர், யுவதிகளுக்கு போட்டியிட வாய்ப்பளிக்கப்படும் என,

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.மஸ்கெலியா சாமிமலை மாக்கலை தோட்டத்தில் இரவு பகல் கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தை (27) திறந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் விரைவில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறும். அந்த தேர்தலில் பிரதேச மக்களை உள்ளடக்கிய தோட்டப்பகுதி இளைஞர், யுவதிகளை போட்டியிடச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மக்கள் பாரியளவில் வாக்குகளை அளித்து எங்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பி, அமைச்சுப் பதவிகளையும் பெற வைத்திருந்தனர்.இருந்தபோதும்,

மக்கள் எதிர்பார்த்த அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியாது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

இருந்தாலும், மக்களுக்கு சேவை செய்ய முடியாத அரசாங்கத்திலிருந்து நாங்கள் விலகி விட்டோம். எதிர்காலத்தில் நாடு நல்ல ஒரு முன்னேற்றம் அடையும். அதன்போது மக்கள் எதிர்பார்க்கும் அபிவிருத்திகளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஊடாக செய்வதற்கான வாய்ப்புகள் கிட்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜீவன் தொண்டமானின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இந்த மைதானம் புனரமைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இளைஞர் அணி தலைவரும், கொட்டகலை பிரதேச சபையின் தலைவருமான ராஜமணி பிரசாந்த், மஸ்கெலியா பிரதேச சபையின் தலைவர் திருமதி.செண்பகவள்ளி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இளைஞர் அணியின் பொது செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ், இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

# டிக்கோயாவைச் சேர்ந்த இளைஞன் மட்டக்களப்பில் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில், இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டிக்கோயா, லோவர் டிவிசனைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞனே,கடந்த சனிக்கிழமை (27) மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

விடுதி ஒன்றில் வாடகைக்கு அறை எடுத்து அங்கு தங்கியிருந்த இவ்விளைஞன், மட்டக்களப்பிலுள்ள தனியார் வங்கி ஒன்றில் தொழில் புரிந்து வந்ததாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வருகிறது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான பீற்றர் போல் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச்சென்ற, மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டார்.பிரேத பிரிசோதனையின் பின்னர் சடலத்தை நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைககுமபைடி பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

# சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்டோர் கைது

**(மஸ்கெலியா தினகரன் விஷேட நிருபர்)**

சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வந்த அறுவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இது குறித்து நோர்வூட் பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் கூறுகையில்.பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல்களை தொடர்ந்து,சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.இந்தச் சுற்றிவளைப்பில், நோர்வூட் பொலிஸ் நிலைய பொலிஸார் ஈடுபட்டனர். இதன்போது,ஆறுபேர் கைதாகினர்.

திகதி 27.08.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4860 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,630,650.00 — ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 3 6 1 2 0 6 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 42,586,581.60

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 890 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,955,740.00 — வெற்றி இலக்கினம் B — வெற்றி இலக்கங்கள் 06 22 31 35 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 122,927,977.60

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3102 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,219,960.00 — ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 06 40 48 53 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 72,266,168.80

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 169 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,255,420.00 — இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 13 24 40 55 — விசேட இலக்கினம் துலாம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,253,308.00

கோடி 26+ Mega Power மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1208 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,934,900.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 267,710,246.00 — ஆங்கில எழுத்து P — சுப்பர் நம்பர் 03 — வெற்றி எண்கள் 11 17 63 73 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 — பெக்ஸ்: 011-4669475 — Email : info@nlb.lk — Web : www.nlb.lk — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

திகதி 26.08.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4859 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,263,850.00 — ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 7 8 0 5 2 8 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 41,283,113.60

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 1316 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,648,160.00 — வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 4 1 8 5 6 1 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,150,600.40

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 889 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,139,100.00 — வெற்றி இலக்கினம் L — வெற்றி இலக்கங்கள் 24 65 66 71 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 122,922,545.20

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3101 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,192,720.00 — ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 10 16 20 39 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 72,002,251.20

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 168 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,440,420.00 — இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 07 52 57 61 — விசேட இலக்கினம் மகரம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,238,196.40

கோடி 26+ Mega Power மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1207 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,146,000.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 267,710,246.00 — ஆங்கில எழுத்து D — சுப்பர் நம்பர் 10 — வெற்றி எண்கள் 26 30 63 71 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 — பெக்ஸ்: 011-4669475 — Email : info@nlb.lk — Web : www.nlb.lk — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01


**விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)**

**மாகாண மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்**

கிழக்கு மாகாணம்

**வாகன வருமான அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்கான பெறுகை**

**பெறுகை இல: EP/DMT/MSOI/Purchasing/2022**

01. 450,000 எண்ணிக்கையான வாகன வருமான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக ஆர்வமுள்ள, தகைமையும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை கிழக்கு மாகாண, மாகாண மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் பெறுகைக்குழுவின் தலைவர் அழைக்கிறார்.
02. தேசிய போட்டி கேள்வி முறைமையூடாக விலைமனுக்கோரல் நடத்தப்படும்.
03. வேலைநாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.30 இற்கிடையில் திருகோணமலை புனித அந்தோனியார் வீதி, கிழக்கு மாகாணம், மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளரிடம் இருந்து 2022.08.30 முதல் 2022.09.27 வரை ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்களால் ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம்.
04. பொருந்தக்கூடிய ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் ரூ.1000/- காசாக செலுத்துவதன் பேரில் மற்றும் “விலைமனு ஆவணங்களுக்கான விண்ணப்பத்திற்காக” அவர்களது கடிதத் தலைப்பில் வேண்டுதலை மேற்கொண்டு மற்றும் வியாபார பதிவின் அனுமதிக்கப்பட்ட பிரதியை விலைமனுதாரர்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன், விலைமனு தேவைப்பாடுகளை பூர்த்திசெய்தல் வேண்டும். (விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள விலைமனு தேவைப்பாடுகளின் விரிவான விளக்கம்)
06. 2022.09.28 பி.ப.3.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும் நேரம் அல்லது அதற்கு முன் திருகோணமலை, புனித அந்தோனியார் வீதி, கிழக்கு மாகாணம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம் ஆணையாளருக்கு விலைமனுக்கள் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கேள்விப் பெட்டியில் வைப்பிலிடல் வேண்டும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாகத் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. எல்லா விலைமனுவுடனும் ஓர் விலைமனுப் பிணையான ரூ.45,000.00 இணைக்கப்படல் வேண்டும்.
08. எந்த விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் வருடாந்த விலைமனு செயல்முறைக்கு மற்றும் விலைமனுதாரர்களுக்கு எந்த பொறுப்பும் கூறாமலேயே எந்த நேரத்திலும் எல்லா விலைமனுக்களையும் நிராகரிக்கும் அதிகாரத்தை பெறுகைக்குழுவின் தலைவர் கொண்டிருப்பார்.

**தலைவர்**
**மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்**
**கிழக்கு மாகாணம்**
**புனித அந்தோனியார் வீதி,**
**திருகோணமலை**

**தொடர்பு தொ.பே.இல: 026-2224046**



**இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம் அநுராதபுரம்**

**கேள்விக்கான அழைப்பு**

**பூங்கா பாராமரிப்பு மற்றும் தரை வடிவமைப்பு சேவை — 2022/2023**

2022/2023ஆம் ஆண்டிற்காக இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகத்தின் பூங்கா பராமரிப்பு மற்றும் தரை வடிவமைப்பு சேவையை நடத்திச் செல்வதற்கு பல்கலைக்கழகத்தின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1. தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் பிரகாரம் கேள்வி கோரல் இடம்பெறும்.
2. ஒப்பந்த காலம் 01 வருடமாகும்.
3. கேள்விதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன் கீழ்க்காணும் தகைமைகள் மற்றும் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
   3.1 **பதிவு**
   CIDA SP4 தகைமை அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையை பூர்த்தி செய்துள்ள பதிவு செய்துள்ள வர்த்தக நிறுவனமாக இருத்தல் அல்லது பிரதேச செயலாளரின் கீழ் அல்லது அதற்குச் சமமான அரச நிறுவனமொன்றில் பதிவு செய்துள்ள செயற்பாடுகளை சனசமூக சங்கமாக இருத்தல் (வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி அல்லது சனசமூக சங்கங்களுக்கு குறித்த அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினால் விநியோகிக்கப்படும் தகைமை சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.)
   3.2 **சேவை அனுபவம்**
   குறித்த துறையில் 03 வருட (2018/2019, 2019/2020, 2020/2021) சேவை அனுபவத்தை பூர்த்தி செய்திருப்பதுடன் அதில் 01 வருடத்திற்கு சமமான கொள்ளளவு உடைய சேவை அனுபவத்துடன் இருத்தல் வேண்டும். (சமமான கொளளளவு என்பது குறைந்த பட்சம் 17 ஊழியர்கள் அல்லது வருடாந்த ஒப்பந்த பெறுமதி ரூ. 6 மில்லியன் உடன் 01 வருட சேவை ஒப்பந்தமாகும்)
4. இதனோடு சம்பந்தப்பட்ட கேள்வி ஆவணங்களை 2022.08.29 முதல் 2022.09.19 பி.ப. 2.00 வரை (அலவலக நேரங்களில்) இப் பல்கலைக்கழகத்தின் நிதிப் பிரிவில் விநியோகிக்கப்படும். அதற்காக மிளளிக்கப்படாத ரூபா ஆயிரத்து ஐநூறு (ரூ. 1500/-) கட்டணத்தை பல்கலைக்கழகத்தின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை எழுத்து மூல வேண்டுதலுடன் உதவிப் பதிவாளர் (நிதி) இடம் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி ஆவணத்தை நிதிப் பிரிவிற்கு வருகை தந்து அல்லது இப் பல்கலைக்கழகத்தின் இணைய தளத்தில் (www.busl.ac.lk) பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் மற்றும் அதன் நகல் பிரதிகளை வேறுவேறு கடித உறைகளில் இட்டு அங்கு ‘மூலப்பிரதி’ மற்றும் ‘நகல்பிரதி’ என்று தெளிவாகக் குறிப்பிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு கடித உறையில் இட்டு 2022.09.20ம் திகதி பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்குமாறு தலைவர், திணைக்கள பெறுகைக்குழு இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம், புத்தளம் வீதி, அநுராதபுரம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
6. கேள்வி ஆவணங்கள் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘பூங்கா பராமரிப்பு மற்றும் தரை வடிவமைப்பு சேவை வழங்குதல் 2022/2023’ என்று குறிப்பிட்டு பொறியிட்டு இருத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். 2022.09.20 பி.ப. 2.00 இற்கு கேள்வி ஆவணங்கள் திறக்கப்படும். கேள்விதாரருக்கு அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு இதற்காக சமுகமளிக்கலாம்.
7. சகல கேள்விகளும் 2022.12.05 வரை (77 நாட்கள்) செல்லுபடியாதல் வேண்டும்.
8. கேள்வி ஆவணங்களுடன் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட ரூபா தொன்னூராயிரம் (ரூ. 90,000/-) பெறுமதியான நிபந்தனையற்ற கேள்விப் பிணை ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் அது 2023.01.02ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். கேள்விப் பிணையானது இக் கேள்வி ஆவணத்தில் உள்ள மாதிரிக்கு அமைவாக இருத்தல் வேண்டும். கேள்விப் பிணையை காசாக பல்கலைக்கழகத்தில் வைப்புச் செய்ய முடியும் அத்துடன் அதனோடு சம்பந்தப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை கேள்வி ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.
9. கேள்விக்கு முன்னரான கூட்டம் (Pre-Bid Meeting) 2022.09.16ம் திகதி மு.ப. 10.00 இற்கு இப் பல்கலைக்கழகத்தின் ‘சனாதன’ இல்லத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்காக தமது செலவில் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம்,**
**புத்தளம் வீதி, அநுராதபுரம்.**
2022.08.29

# கிழக்கின் குரல்



# உலக உணவுத்திட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் கிராமங்களுக்கு நேரடி விஜயம்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

உலக உணவுத்திட்டத்தால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களை நேரில் சென்று பார்வையிடும் பொருட்டு, இலங்கைக்கான பணிப்பாளர் அப்துர்ரஹீம் சித்தீக்,கள விஜயங்களை மேற்கொண்டார்.

வவுணதீவு பிரதேச செயலகத்திற்குப்பட்ட பன்சேனை கிராமம், முந்தானை ஆறு நீர்ப்பாசன திட்டம் மற்றும் கிரான் பிரதேச செயலகத்திற்குப்பட்ட வாகனேரி கிராமம் என்பவற்றுக்கே உலக உணவுத்திட்ட இங்கைக்கான பணிப்பாளர் அப்துர்ரஹீம் கள விஜயம் மேற்கொண்டிருந்தார்.

வவுணதீவு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பன்சேனை கிராமத்தில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயல்திட்டங்களை அவதானித்த அவர், பிச்சையடிச்சேனை குளத்தின் புனர்நிர்மாணம் தொடர்பாகவும் ஆய்வினை மேற்கொண்டார்.

விவசாய நடவடிக்கைகளுக்கு



நீர்வழங்க இக்குளத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கால்வாயை அவதானித்த அவர், கால்வாயில்லாததால், கடந்தகாலங்களில் அதிகளவான நீர் இக்குளத்திலிருந்து விரயமானமை குறித்தும் அவருக்கு எடுத்துரைக்கப்பட்டது.

விவசாயக் கிணறுகள், சிறு குளங்களை திருத்துவது, கோழி வளர்ப்பு, வீட்டுத்தோட்டம், வாய்க்கால்களை துப்பரவு செய்தல்,நெசவுத் தொழில், மக்களின் போஷாக்கு, விவசாய உள்ளீடுகள் வழங்கள், ஆடு வளர்ப்பு, சிறிய அளவிலான பாலுற்பத்தி உட்பட வாழ்வாதார செயற்றிட்டங்களுக்கான பயிற்சிகளை உலக உணவுத்திட்டம் வழங்குகின்றது.

இவ்விஜயத்தில்,செங்கலடியிலுள்ள முந்தானை ஆறு திட்டப் பணிப்பாளர் காரியாலயத்திற்கும் அப்துர்ரஹீம் விஜயம் செய்தார். இங்கு நடந்தகலந்துரையாடலில், திட்ட பணிப்பாளர் சமன் வீரசிங்க, வதிவிட பொறியியலாளர் எம். மயூரன், பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அ.விஷ்ணுரூபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கிரான் பிரதேச செயலகத்திற்குற்பட்ட வாகனேரி கிராமத்தில் மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சனைகள், சவால்களை

பற்றியும் உலக உணவுத்திட்டத்தில் இலங்கை பணிப்பாளருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

உணவுத்திட்டத்தால் மேற்கொள்ளப்படும் வாழ்வாதார செயற்றிட்டங்களினுடாக,பல உதவிகளை செய்து தருவதாக இதன்போது, அவரால் உறுதியளிக்கப்பட்டது.

# மாணவர் கௌரவிப்பு விழா

(பள்ளிக்குடியிருப்பு தினகரன் நிருபர்)



தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இறக்காமம் றோயல் கனிஷ்ட கல்லூரி மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் 'மகத்துவம் மாண்புறு விழா2022' பாடசாலை அதிபர் எம்.ஏ.எம்.பஜீர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. சம்மாந்துறை வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.எம்.எம். அமீர் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஏ. எம் சியாத், கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.மஹ்மூத்லெப்பை , கல்வியியலாளர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சிறுவர் உரிமை, கடமை தொடர்பான செயலமர்வு

( காரைதீவு குறூப் நிருபர் )



சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையின் முறை சாரார் கல்வி பிரிவு சிறுவர் உரிமை மற்றும் கடமைகள் தொடர்பான செயலமர்வை நடத்தியது.

சம்மாந்துறை தாருஸ் ஸலாம் மகா வித்தியாலயத்திலும் நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்திலும் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

சம்மாந்துறை வலய முறைசாரா கல்வி உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் இந்த செயலமர்வுகள் நடைபெற்றன. சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ் எம் எம் . அமீரின் வழிகாட்டலில், பிரதிக்கல்வி பணிப்பாளர் அரபாத்,இந்நிகழ்வுகளை ஒருங்கிணைப்புச் செய்தார்.

இதில், ஆசிரிய ஆலோசகர் அஹமட்லெவ்வை மற்றும் பெருந்திரளான மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# சாரண ஆசிரியர்களுக்கு மூன்றுநாள் செயலமர்வு

(பாலமுனை தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில், சாரண ஆசிரியர்களுக்கான கலைக்கூறு இரண்டு பயிற்சிநெறி அக்கரைப்பற்று மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) நடைபெற்றது.

மாவட்ட சாரணர் ஆணையாளர் எஸ்.ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்ற இப்பயிற்சிநெறியில், அக்கரைப்பற்று ,சம்மாந்துறை ஆகிய கல்வி வலயங்களிலிருந்து சுமார் 25க்கும் மேற்பட்ட சாரண ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்

கடந்த வெள்ளி,சனி,ஞாயிறு தினங்களில் (26.27.28.) மூன்று தினங்களாக நடைபெற்ற இச்செயலமர்வின் பயிற்சித் தலைவராக, இலங்கை சாரணர் சங்கத்தின் உதவி ஆணையாளர் பீ.அஜீத் குமார் தலைமையிலான வளவாளர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கி வைத்தனர்.

# கல்முனை ஹூதா ஜும்ஆ பள்ளிவாசலில் மாபெரும் இரத்ததான முகாம்

(சாய்ந்தமருது விஷேட நிருபர்)

கல்முனை ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் வழிகாட்டலில் தஃவா குழுவின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் நேற்று (28) கல்முனை ஹுதா ஜும்ஆ பள்ளிவாசலில் இடம்பெற்றது.ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் ஏ.வி.எம். இப்றாஹீம் தலைமையில் இடம்பெற்ற இந்த இரத்த தானமுகாம்,கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகத்தினர் மற்றும் தஃவாகுழுவினரின் முழுமையான பங்களிப்புடன்,

அஷ்ஷெய்க் ஸாபித் (ஸரயி, றியாதி) இதை நெறிப்படுத்தினார். இந்த இரத்ததான முகாம் ஆரம்பநிகழ்வில்,கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி,கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.எல்.எப். ரகுமான்,கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மி, கல்முனை பொலிஸ் நிலைய சமூகபாதுகாப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எல்.ஏ.வாஹிட், கல்முனை அஷ்ரஹ்ப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்தியர் ஏ.எஸ்.எம்.றிஸ்மியா, கல்முனை பொலிஸ் நிலைய சமூகபாதுகாப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி எம்.பி.எம்.அமான்,கல்முனை பொலிஸ் நிலைய போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி கே.எம்.எஸ். குமார உட்பட பள்ளிவாசல் நிர்வாகத்தினர், உலமாக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த கறவைப்பசுக்கள் விநியோகம்

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

திருகோணமலை மாவட்டம்,தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட கால் நடை வளர்ப்பாளர்களுக்கான கறவைப் பசு மாடுகள் வழங்கி வைக்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில்,கடந்த (26) இந் நிகழ்வு கல்மெடியாவ வடக்கு கிராம சேவகர் பிரிவில் இடம்பெற்றது. முஸ்லிம் எயிட் நிறுவனம் ஊடாக சுமார் 35 பயனாளிகளுக்கு தலா 300000 ரூபா பெறுமதியான கறவைப் பசுமாடுகள் பயனாளிகளிடத்தில் ஒப்படைக்கப் பட்டன.

பாற்பண்ணை தொழில் மூலமான நாளாந்த வருமானத்தை அதிகரிக்கவும், தற்போதைய நிலையில் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருமானத்தை ஈட்டும் நோக்கிலும் இந்த மாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது, முதலுதவிப் பெட்டிகளும் கால் நடை வளர்ப்பாளர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம, உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், முஸ்லிம் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஏ.சி.பைசல்கான், கால்நடை வைத்தியர் உட்பட பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள் எனப்பலர் இதில்,கலந்து கொண்டனர்.

# மாஞ்சோலை கிராமத்தில் தாய்,சேய் நிலையத்திற்கு அடிக்கல்



(கல்குடா தினகரன் நிருபர்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பதுரியா மாஞ்சோலை கிராமத்தில், தாய்,சேய் நிலையத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எச்.எம்.தாரீக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஓட்டமாவடி பிரதேசசபை தவிசாளர் ஏ.எம்.நௌபர், ஓட்டமாவடி பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ், ஐ.எஸ்.ஆர்.சி அமைப்பின் திட்ட இணைப்பாளர் ஏ.எல்.ஜுனைட் நளிமி,கிராம சேவை உத்தியோகத்தர் ஏ.ஜி.எம். பஸ்லி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.எம். நூகுத்தம்பி, பதுரியா, மாஞ்சோலை பள்ளிவாசல் நிருவாகிகள், கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மாஞ்சோலை கிராமத்தில், தாய், சேய் நிலையம் இல்லாது, பொதுக் கட்டடத்தில் இந்நிலையம் இயங்கி வந்தது. இந்நிலையில், ஸக்காத் ஹவுஸ் ஸ்டேட் ஒப் குவைத் என்னும் நிறுவனத்தின் நிதி உதவி மூலம் இலங்கையிலுள்ள ஐ.எஸ்.ஆர்.சி அமைப்பினூடாக இதற்கென,கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.ஐ.எஸ்.ஆர்.சி அமைப்பின் திட்ட இணைப்பாளர் ஏ.எல்.ஜுனைட் நளிமி இதுபற்றித் தெரிவித்தார்.

# கிண்ணியா பிரதேச அமைப்புக்கள் இணைந்து பண்பாட்டு எழுச்சிக்கான திட்டம் தயாரிப்பு

(கிண்ணியா தினகரன் நிருபர்)

கிண்ணியா சூறா சபையின் ஒருங்கிணைப்பு வழிகாட்டலில் தேசிய அஹதியா சம்மேளனம், கிண்ணியா உலமாசபை மற்றும் கிண்ணியா பள்ளிவாசல்கள் சம்மேளனம் என்பன இணைந்து, பண்பாட்டு எழுச்சிக்கான நிகழ்ச்சி திட்டங்களை தயாரித்துள்ளன. இது தொடர்பான ஒன்றுகூடல்,

நேற்று ஞாயிற்றுக்கிழமை( 28) கிண்ணியா மஸ்ஜிதுல் ஹைர் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், அகில இலங்கை அஹதிய்யா மத்திய சம்மேளனத்தின் தலைவர் அல் ஹாஜ் எம்ஆர். எம்.சறுக், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.எல்.எம்.அன்வர் அலி,கிண்ணியா சூறாசபையின் தலைவர் ஏ.ஆர். பரீட்,கிண்ணியா பள்ளிவாசல் சம்மேளன தலைவர் வை.முஹ்மின், கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம்.மஹ்தி ஆகியோருடன் இன்னும் பல முக்கியஸ்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின்போது அனைத்து பாடசாலைகளிலும் கல்வி நிர்வாகத்தினரின் அனுசரணையுடன் அஹதியா பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பிலும் அனைத்து பள்ளிவாயல்களிலும் குர்ஆன் மதரஸாக்களை ஆரம்பித்தல் தொடர்பாகவும் பெண்களுக்கான விழிப்புணர்வு செயல்பாடுகளையும் குடும்ப கட்டமைப்பு தொடர்பான விடயங்களுக்காகவும் தொடர்ச்சியான வாராந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்வது தொடர்பாகவும் பிரத்தியேக கல்வி நிலையங்களில் ஆன்மீக ரீதியான வழிகாட்டல்களுக்கும் நற்பண்புகளை வளர்க்கக்கூடிய செயல் திட்டங்களை அமல்படுத்துமாறு வலியுறுத்துதல் தொடர்பிலும் தீர்க்கமான முடிவுகள் எட்டப்பட்டன.

# அக்கரைப்பற்றில் டெங்கு பரவலை கட்டுப்படுத்த திடீர் களப்பரிசோதனை

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனைக்கமைவாக இன்று (29) திங்கட்கிழமை முதல் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் டெங்கு பரவலை கட்டுப்படுத்துவதற்கான களப்பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

பாதுகாப்பு துறையினரின் ஒத்துழைப்புடன், இக்களப்பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எப்.எம்.ஏ.காதர் தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று14ம் பிரிவில் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதை தொடர்ந்து இப்பிரதேசத்தில் இக்களப்பரீட்சை முன்னெடுக்கப்பட உள்ளது. சுகாதாரப் பிரிவினர், பாதுகாப்பு துறையினர், தொண்டர் அமைப்புக்களின் உதவியுடன் இப் பரிசோதனை மேற்கொள்ளெப்படும்.வீடுகள், வெற்றுக்காணிகள் மற்றும் நுளம்பு பரவக்கூடிய இடங்கள் ஆகியவற்றை சுத்தப்படுத்தி,பயங்கரமான உயிர் கொல்லி டெங்கு நோயிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுமாறு பொதுமக்களை சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார். சுகாதார ஆலோசனைகளை பொருட்படுத்தாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் டாக்டர் காதர் மேலும் தெரிவித்தார்.

# கடலரிப்பை தடுக்க நடவடிக்கை எடுக்காமைக்கு எதிராக வழக்குத்தாக்கல்

(ஒலுவில் விஷேட நிருபர்)

திருக்கோவில் மற்றும் தம்பிலுவில் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள பாரிய கடலரிப்பைக் கட்டுப்படுத்த தவறியமை க்கு எதிராக, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றில் சட்டத்தரணி ஆ. முஹம்மது பாறூக் இரண்டு வழக்குகளை வெள்ளிக்கிழமை (26) தாக்கல் செய்துள்ளார்.

கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.கே. பிரபாத் சந்திரகீர்த்தி, கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் கல்முனைப் பிராந்திய பொறியியலாளர் ஆகியோருக்கு எதிராகவே வழக்குத்தாக்குதல் செய்யப்பட்டுள்ளது.

கடலரிப்பை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமைக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் 136(1)(அ) வின் கீழ், இவ்வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக, பொது நல முறைப்பாட்டாளரான சட்டத்தரணி ஆ. முஹம்மது பாறூக் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ள தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்திற்கு முன்னாலுள்ள கடல் பகுதி மற்றும் திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்திற்கு முன்பாகவுள்ள கடற்பகுதி மிக என்பன மிக ஆபத்தான கடலரிப்புக்குள்ளாகி மக்களின் வாழ்வாதாரம் உள்ளிட்ட குடியிருப்புகள், மீனவ வாடிகள் பாதிக்கப்பட்டுள்ளன., இங்குள்ளோரின், இருப்புக்களுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1987ம் ஆண்டு 57ம் இலக்க கடலோர பாதுகாப்பு சட்டத்தின் 04 மற்றும் 42 ஆம் பிரிவுகளின் சட்ட பணிப்புரைகளுக்கு கீழ்படியாது, மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் சேதங்கள் ஏற்படுமென நன்றாக அறிந்திருந்தும் அக்கடமையை புரியாமல் அலட்சியமாக இருந்தமை,உள்ளிட்டவை இலங்கை தண்டனை சட்டக்கோவையின் 162 மற்றும் 289 ஆம் பிரிவுகளின் கீழ் தண்டிக்கப்படக் கூடியதென வழக்குத்தொடுத்தவர் சுட்டிக்காட்டியுள்ளார். சட்டத்தரணிகளான ஏ.முஹம்மது பாறுக், ஏ.சீ. பாத்திமா சஸ்னா, விநாயகமூர்த்தி அனுஜா, யுலோசனா, ஜெயசுதன் ஆகியோர் மன்றில் ஆஜராகி இருந்தனர்.

# பாடசாலை நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்பு

(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)



அக்கரைப்பற்று தேசிய பாடசாலை மாணவர்களின் நலன் கருதி, பழைய மாணவரும், ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளருமான யூ.எல். எம். ஹாசீம் ஒரு தொகுதி நூல்களை பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தார்.

அதிபர் ஏ.பி. முஜீன் தலைமையில் பாடலையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம். ஹாசீம், சிரேஷ்ட ஆசிரியர்களான எம்.ஐ. ஏ.வஹாப், யூ.எல்.ஹாறூன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று தேசிய பாடசாலையிலுள்ள நூலகத்தில் சுமார் 20 ஆயிரத்திற்கும் அதிகமான நூல்கள் உள்ளன. இந்நூலகத்திற்கென நூல்களை அன்பளிப்புச் செய்யும் நடவடிக்கைகளில் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், துறைசார் முக்கியஸ்தர்கள் மற்றும் மாணவர்கள் போன்றோர் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள்,நூல்களை அவ்வப்போது அன்பளிப்புச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நல்லூரானுக்கு திருக்கல்யாணம்






**யாழ்.விசேட நிருபர்**

நல்லூர் ஆலய வருடாந்திர மகோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொடியிறக்கத்துடன் நிறைவுற்ற நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பூங்காவன திருவிழாவான முருகனின் திருக்கல்யாணம் நடைபெற்றது. மாலை இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து முருகனுக்கு திருக்கல்யாணம் நடைபெற்றது.

அதன் போது, தினைப்புனம் காவல் புரியும் வள்ளியை காந்தர்வ மணம் செய்ய தமையனான விநாயகருடன் முருகப்பெருமான் தினைப்புனத்திற்கு எழுந்தருளி, வள்ளியை காந்தர்வ முறையில் மணம்புரிவார்.

இவ்விடயத்தை அறிந்த தெய்வயானைத் தேவியானவர் கோபத்தால் வாயில் கதவை மூடி கோபம் புரிவார்.

வள்ளியுடனும் விநாயகருடனும் வெளிவாசலில் நின்ற முருகப்பெருமான் அச்சமயத்தில் திருநல்லூர் ஏசல் பாடல் பாடி தன்னருளால் திருக்கதவின் தாள் திறந்து, தெய்வயானையின் மனத்தில் அவரால் உருவாக்கப்பட்ட பொய்யூடல் மறையச் செய்யப்படும். பின்பு, தெய்வயானைத் தேவி வெளியே வந்து முருகப்பெருமானால் மாலைமாற்றப்பட்டவராக, தன் தங்கையான வள்ளியை ஏற்று உள்வீதிவலத்துடன் வசந்தமண்டபத்துக்கு ஆனந்த கோலாகலமாக மீள்வர். இந்நிகழ்வை சித்தரிக்கும் முகமாக பூங்காவன திருவிழா நடைபெற்றது.

# வடக்கு, தமிழ்நாடு சுற்றுலாத்துறையை இணைக்க ஆளுநர் திட்டம்



**கோப்பாய் குறூப் நிருபர்**

வட மாகாண சுற்றுலா துறையும் இந்திய தமிழ்நாட்டு சுற்றுலா துறையும் இணைக்க வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா திட்டங்களை வகுத்து வருகிறார்.

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையதின் ஊடாக தமிழ்நாட்டையும் வடக்கு மாகாணத்தையும் இணைத்து குறித்த சுற்றுலாத்துறை இணைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் மூலம் வடக்கில் இருந்து தமிழ்நாட்டின் பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்களை தரிசிக்கவும் தமிழ்நாட்டிலிருந்து வடக்கின் சுற்றுலா மையங்கள் மற்றும் ஏனைய பிரதேசங்களின் சுற்றுலா மையங்களுக்கு இலகுவாக சென்று வருவதற்கும் ஆளுநர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

கடந்த வருட இறுதியில் இந்தியாவுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட வட மாகாண ஆளுநர் குறித்த விடயம் தொடர்பில் தமிழ்நாட்டின் துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் எலிக்காய்ச்சலால் இராணுவ சிப்பாய் உயிரிழப்பு!

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் கீரிமலை இராணுவ முகாமில் கடமையாற்றிய இராணுவ சிப்பாய் ஒருவர் எலிக்காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கீரிமலை இராணுவ முகாமில் கடமையாற்றி வரும் குறித்த சிப்பாய் கடந்த 22ஆம் திகதி எலிக்காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்ட நிலையில், முன்னதாக பலாலி இராணுவ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

பின்னர் அங்கிருந்த மேலதிக சிகிச்சைக்காக கடந்த 25ஆம் திகதி யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மறுநாள் 26ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# யாழில் உள்ள பிரபல விடுதியில் தீ விபத்து

## கனடா நாட்டவரின் உடைமைகள் தீயில் எரிந்து நாசம்!

**யாழ் குறூப், யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் , விடுதி அறையில் தங்கியிருந்த கனடா நாட்டினை சேர்ந்தவர்களின் உடைமைகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. குறித்த விடுதியில் இவர்கள் தங்கி இருந்த விடுதி அறையில் பொருத்தப்பட்டு இருந்த குளிரூட்டியில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாகவே தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. குறித்த விடுதி அறையில் தீ விபத்து ஏற்பட்ட போது விடுதி பணியாளர்கள் விரைந்து செயற்பட்டமையால் தீ மேலும் பரவாமல் தடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# மறைந்த ஊடகவியலாளர் பிரகாஷின் ஞாபகார்த்தமாக இரத்ததானம்



**யாழ்.விசேட , பருத்தித்துறை நிருபர்**

கடந்த வருடம் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மறைந்த இளம் ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஷின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

பிரகாஷினுடைய நண்பர்களின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

கொடிகாமத்தைச் சேர்ந்த பிரகாஸ் தனது ஏழாவது வயதில் தசைத்திறன் குறைபாடு (Muscular Dystrophy) நோயினால் பாதிக்கப்பட்டதால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டது.

அதனால் தரம் ஐந்துடன் தனது பாடசாலை கல்வியை இடைநிறுத்திக் கொண்டார்.

அந்நிலையிலும் அவற்றை எல்லாம் தாண்டி அவர் ஊடக துறையில் தனக்கென்று ஒரு இடத்தினை தக்க வைத்திருந்தவர்.

சுயாதீன ஊடகவியலாளராக யாழில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்கு கட்டுரைகள், செய்திகள் எழுதி வந்ததுடன், உள்நாட்டு, வெளிநாட்டு இணையத்தளங்களில் செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதி வந்தார். அதேவேளை சில இணையத்தளங்களில் செய்தி பதிவேற்றுனராகவும் கடமையாற்றி வந்தார்.

அந்நிலையில் கடந்த 2021 செப்டம்பர் 2ம் திகதி கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தார்.

# யாழில் இராணுவ தளபதியால் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் ஆரம்பித்து வைப்பு




**கோப்பாய் குறூப் நிருபர்**

இலங்கை இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே யாழ் கோப்பாயில் அமைந்துள்ள 51 ஆவது படைப்பிரிவில் (26) வெள்ளிக்கிழமை பொதுமக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

51ஆவது படைப்பிரிவு அமைந்துள்ள காணியின் ஒரு பகுதியில் வைத்தியசாலை, கணணி வகுப்பறையுடன் கூடிய நூலகம் விளையாட்டு மைதானம், மற்றும் உடற்பயிற்சி தொகுதி ஆகியவற்றை இவ்வாறு ஆரம்பித்து வைத்தார்.

புதிய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற உதைபந்தாட்ட காட்சிப் போட்டியை இராணுவத் தளபதி பார்வையிட்டதுடன் பங்கு பற்றிய மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கினார். பின்பு அங்கு வருகை தந்த மக்களுடன் சினேக பூர்வமான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

# திருட்டு சந்தேக நபர் போதைப்பொருளுடன் கைது

## மேலதிக நடவடிக்கைக்காக சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைப்பு!

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பல திருட்டு சம்பவங்களில் ஈடுபட்ட சந்தேகத்தில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் போதைப்பொருளுடன் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து 80 கிராம் ஹெரோயின் , திருடப்பட்ட 7 துவிச்சக்கர வண்டிகள் , 4 மின் மோட்டார்கள் , 02 எரிவாயு சிலிண்டர்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளான குப்பிளான் , புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் அண்மைய நாட்களில் மின் மோட்டார்கள் , துவிச்சக்கர வண்டிகள் , சமையல் எரிவாயு சிலிண்டர்கள் என்பன திருடப்பட்டதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினருக்கு குப்பிளான் கம்பம் புலம் பகுதியில் திருட்டு சந்தேக நபர் மறைந்த இருப்பதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த புலனாய்வு பிரிவினர் சந்தேக நபரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரையும் , அவரிடம் இருந்து மீட்கப்பட்ட பொருட்களையும் புலனாய்வு பிரிவினர் மேலதிக நடவடிக்கைக்காக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கையளித்துள்ளனர்.

### யாழ் பல்கலைக்கழக விலங்கியல் துறையின்

# முன்னாள் தலைவருக்குப் பேராசிரியராகப் பதவி உயர்வு



**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விலங்கியல் துறையின் முன்னாள் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி தம்பு ஈஸ்வரமோகன் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இதற்கான ஒப்புதலை பல்கலைக்கழகப் பேரவை நேற்று முன்தினம் சனிக்கிழமை வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

அதன் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த கலாநிதி தம்பு ஈஸ்வரமோகனின் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்த, மூதவையினால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கை, நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், விலங்கியல் துறையின் முன்னாள் தலைவரும், விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி தம்பு ஈஸ்வரமோகன் விலங்கியலில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

# சாவகச்சேரி பிரதேசசபைக்கு ஐந்து புதிய உறுப்பினர்கள் நியமனம்



**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரிப் பிரதேச சபையில் நிலவிய உறுப்பினர்கள் வெற்றிடத்திற்கு புதிய ஐந்து உறுப்பினர்கள் தெரிவாகியுள்ள நிலையில் 25/08 வியாழக்கிழமை இடம்பெற்ற பிரதேசசபையின் மாதாந்த அமர்வில் அவர்கள் பங்கேற்றிருந்தனர்.

சாவகச்சேரி பிரதேசசபையில் கடந்த 4வருட காலமாக அங்கம் வகித்த இலங்கை தமிழரசுக்கட்சி உறுப்பினர்களான மதன்ராஜ், செல்வரூபன், மகேந்திரராணி, ஜானகி மற்றும் சண்முகசுந்தரம் ஆகியோர் தமது கட்சி சார்ந்த கொள்கையளவில் பதவி விலகிய நிலையில் புதிய உறுப்பினர்களாக ஆ.நடராசா, ச.தங்கராசா, வ.இந்திராணி, சோ.வனிதாமணி மற்றும் ம.நிர்மலாதேவி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். புதிய உறுப்பினர்களின் வருகை சாவகச்சேரி பிரதேசசபையின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு பலம் சேர்ப்பதாக அமையும் என பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவம்






**(கரவெட்டி தினகரன் நிருபர்)**

வரலாற்றுப் புகழ்பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் ,நேற்று முன்தினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. பிரதமகுரு சிவஸ்ரீ உலக குருநாதன் ஐயர் தலைமையில் பூசைகள் இடம்பெற்று மாலை 4:30 மணியளவில் கொடியேற்றப்பட்டு மஹோற்சவம் ஆரம்பமானது. செப்டெம்பர் 5ஆம் திகதி காலை 9 மணிக்கு பூங்காவனமும், செப்ரெம்பர் 6ஆம் திகதி கைலாச வாகனமும், செப்டெம்பர் 8ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், செப்ரெம்பர் 9ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. செப்டெம்பர் 10ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 6 மணிக்கு மௌனத் திருவிழாவும் செப்டெம்பர் 11ஆம் திகதி பூக்காரர் பூசையும் நடைபெறவுள்ளது.

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 ஓகஸ்ட் 31ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 67,500 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122L024 | LKA18223C036 | LKA36423I011 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 27,500 | 20,000 | 20,000 | 67,500 |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2022 ஓகஸ்ட் 31 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2022 செப்டெம்பர் 02 |
| வழங்கப்படும் திகதி | : 2022 செப்டெம்பர் 02 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2022 ஓகஸ்ட் 31, புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள் |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம். ஆசிம்**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

---

**கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

## கட்டிடங்கள் திணைக்களம்

## கேள்விகளுக்கான அழைப்பு

### கொழும்பு -07 தேசிய நூதனசாலையின் பிரதான கட்டிடத்தின (Painting Gallery) கூரையை திருத்துதல்

**(ஒப்பந்த இலக்கம்: RPC/CE(W/S)-08/22)**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் மற்றும் 5.5 மில்லியன் ரூபா மதிப்பீட்டுச் செலவைக் கொண்டதுமான கொழும்பு -07 தேசய நூதனசாலையின் பிரதான கட்டிடததின் (Painting Gallery) கூரையை திருத்துதல் வேலைகளுக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் பிராந்திய பெறுகைக் குழு (மேற்கு/தெற்கு) பெறுகைக் குழுத் தலைவர் கோருகிறார்.

   நிர்மாணக் காலம் 60 நாட்கள்.
2. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016 (iii) ஆம் இலக்கம் மற்றும் 03/2020ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கேள்விகள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) கட்டிட நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கான C5, C6 அல்லது C7 தரம் அல்லது அதற்கு மேற்பட்ட பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

   பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் கேள்விதாரர்கள் 1987இன் 3ம் இலக்க ஒப்பந்த விதிகள் பற்றிய ஒப்பந்தச் சட்டத்தின் பெறுகை விதிகளின் பிரகாரம் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை (Original Certificate of PCA 03) கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். PCA 03 பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் இந்தப் பெறுகை கையளிக்கப்படமாட்டாது.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கொழும்பு -07, டொரிங்டன் அவென்யூ. இல. 213 கட்டிடங்கள் திணைக்களம் (மேற்கு, தெற்கு), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம். தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 011 2554691, தொலைமடல்: 011 2554690
5. மீளளிக்கப்படாத கட்டணமாக இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை (ரூபா 2,500.00) 2022.08.29ஆம் திகதி முதல் 2022.09.09ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கொழும்பு -07, டெரிங்டன் அவென்யூ. இல. 213 கட்டிடங்கள் திணைக்களம் (மேற்கு, தெற்கு), பிரதம பொறியியலாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. கேள்விகளை 2022.09.12ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (தெற்கு, மேற்கு), கொழும்பு -07, டொரிங்டன் அவென்யூ. இல. 213 முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கொழும்பு -07, டொரிங்டன் அவென்யூ. இல. 213 கட்டிடங்கள் திணைக்களம் (தெற்கு, மேற்கு), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் கேள்வியில் பங்குபற்ற தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது நீடிக்கப்பட்ட காலத்திலிருந்து 77 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.
8. அனைத்துக் கேள்விகளுடனும்
   * கேள்வி ஆவணத்தின் 09ம் பிரிவில் உள்ளடங்கும் படிவத்தின்படி
   * கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட
   * 80,000.00 ரூபா தொகைக்கு
   * 2022 டிசம்பர் 25ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்
   * கேள்வித் தரவின் 16.0ஆம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவராகம் ஒன்றினால் வழங்கப்பட்ட கேள்விப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பொறி. G.R.S.B. கம்லத்,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் (பிராந்தியம் 2),**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2ம் மாடி, ''செத்சிறிபாய'', பத்தரமுல்லை.**
**www.buildings.gov.lk**

---

## களனி பிரதேச சபை

## 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

இங்கு கீழே தரப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை 2023ஆம் வருடத்தில் வழங்குவதற்காக ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்ளும் பொருட்டு உற்பத்தியாளர்கள், பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொருட்கள் வழங்குதல்**

1. அலுவலக காகிதாதிகள் (பேனை, பென்சில், காகித வகைகள், பைல் கவர், கம் போத்தல்கள், டிபெக்ஸ் போன்றன)
2. அலுவலக தளபாடங்கள் (மரத் தளபாடங்கள், உருக்கு அலுமாரிகள், மேசைகள், கதிரைகள் போன்றன)
3. அலுவலக உபகரணங்கள் (புகைப்படப்பிரதி இயந்திர உதிரிப்பாகங்கள், தொலைநகல் இயந்திரங்கள், விரல் ரேகை பதிவு இயந்திரங்கள், பணம் எண்ணும் இயந்திரங்கள் முதலானவை)
4. கணனி இயந்திரங்கள் மற்றும் கணனி துணைப் பாகங்கள் (அச்சு இயந்திரம், யூபிஎஸ், டோனர், காட்ரிச், அச்சுப்பொறி ரிபன் போன்றன)
5. மின் உபகரணங்கள் மற்றும் வீதி விளக்குகள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள்
6. சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் (தும்புத்தடி, ஈர்க்கிள், பிரம்புக் கூடைகள், கால்வாய் பிரஷ்கள், கிருமிநாசினி திரவங்கள், சவர்க்காரம், கையுறைகள், கம்பூட்ஸ், குப்பை வண்டிகள் முதலானவை)
7. வாகன உதிரிப்பாகங்கள் (டயர், டியூப், பெட்டறி மற்றும் இயந்திர உதிரிப்பாகங்கள்)
8. வீதிப் பராமரிப்பு உபகரணங்கள் (மண்வெட்டி, சவல், வாரிகள், அரிவாள், கத்தி, மண்வெட்டி பிடிகள், அளக்கும் நாடாக்கள் போன்றன)
9. வீதி மற்றும் கட்டிட நிர்மாணத்திற்குத் தேவையான பொருட்கள் (கல், மணல், சீமெந்து, செங்கல், கம்பி, கூரைத் தகடுகள், ஓடு, கிரவல்மண், கல்மண், கொங்கிறீட் சார்ந்த உற்பத்திகள் போன்றன)
10. ஹியூம் குழாய்கள்
11. தார் வழங்குதல்
12. அலுவலக சீருடைத் துணிகள், அலுவலக டீ சேர்ட்கள், இலகு காற்சட்டைகள் (பொட்டம்), அலுவலக காலணிகள் மற்றும் அலுவலக செருப்புகள்
13. உத்தியோகபூர்வ அடையாள அட்டைகள் தயாரித்தல்
14. கனரக உபகரணங்கள் மற்றும் நிறப்பூச்சு வகைகள்
15. நீர்க்குழாய் துணைப்பாகங்கள்
16. பீடை நாசினிகள் (எலிகளை ஒழிப்பதற்கு)

**சேவை வழங்கல்கள்**

1. அலுவலக அச்சு வேலைகள்
2. கணனி இயந்திரம், அச்சுப் பொறி திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
3. கணனி வலையமைப்பு திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு
4. வாகன திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் வேலைகள்
5. வாகன இருக்கை மேலுறைகள் தயாரித்தல் மற்றும் குஷன் இடுதல்
6. வாகனம் மற்றும் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல் (JCB இயந்திரங்கள், PC 30 இயந்திரங்கள், கல் உருளைகள், மின்பிறப்பாக்கி, அதிர்வழுத்திகள், டிராக்டர், முச்சக்கரவண்டி, 3 1/2 டிப்பர் வண்டிகள், 1 1/4 டிப்பர் வண்டிகள் போன்றன)
7. டியூப் ஒட்டும் வேலைகள், வொல்கனைக்சிங் செய்தல் மற்றும் டயர்களை மீள நிரப்புதல்
8. தகனச்சாலையின் திருத்தவேலைகளைச் செய்தல் மற்றும் பராமரித்தல்
9. சட்டத்தரணி சேவைகள் (சபைக்கான சட்ட ரீதியான ஆலோசனைகள் மற்றும் வழக்கின் தன்மைக்கேற்ப வழக்கைக் கொண்டு நடாத்துவதற்கு)
10. கதிரை இழைத்தல் (பிரம்பு)
11. நில அளவை சேவைகள்

**ஒப்பந்தக்காரர்களுக்கான பதிவுக் கட்டணம்**

| பண வரையறை | | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 1. | ரூபா 500,000.00 வரை | ரூபா 2,000.00 |
| 2. | ரூபா 2,000,000.00 வரை | ரூபா 3,000.00 |
| 3. | ரூபா 4,000,000.00 வரை | ரூபா 4,000.00 |
| 4. | ரூபா 4,000,000.00க்கு மேல் | ரூபா 5,000.00 |

**நிபந்தனைகள்**

01. வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்ள முன்வருபவர்கள் இயைபுடைய பதிவுக் கட்டணத்தைச் செலுத்தி கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் தம்மால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியுடன் (சகல விபரங்கள் சகிதம்) சமர்ப்பித்தல் வேண்டும்.
02. விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து 2022-09-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், களனி பிரதேச சபை, புலுகஹ சந்தி, களனி எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல். – 2023'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
03. ஒவ்வொரு பொருள் வகை வழங்கல் மற்றும் சேவை வழங்கல் தொடர்பில் அவ்விடயங்களுக்காக வெவ்வேறாக விண்ணப்பங்கள் மற்றும் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் நகல் பிரதியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும். (உதாரணம்: 05 விடயங்களுக்காக விண்ணப்பிப்பதானால் பூர்த்தி செய்யப்பட்ட 05 விண்ணப்பப் படிவம் மற்றும் 05 வியாபாரப் பதிவுச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்)
04. ஒரு விடயத்துக்கான பதிவுக் கட்டணமாக 1,000.00 ரூபா செலுத்துதல் வேண்டும்.
05. ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்ய முன்வருபவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட பதிவுக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.
06. தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்புவதானால் ''தலைவர், களனி பிரதேச சபை'' எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலையொன்றின் மூலம் மட்டும் கொடுப்பனவைச் செலுத்தலாம். காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
07. 4,000,000.00 ரூபாவுக்கு மேலான ஒப்பந்தக்காரர்கள் (வீதி நிர்மாணம் மற்றும் கட்டிட நிர்மாணம்) அரச நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பத்துடன் இயைபுடைய சான்றிதழின் பிரதியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

    மேலதிக விபரங்களுக்கு 0112-914110 எனும் தொலைபேசி இலக்கத்தில் வழங்கல் விடயப் பொறுப்பு அதிகாரியைத் தொடர்பு கொள்ளவும்.

2022-08-29ஆம் திகதி.

**டபிள்யூ. டி. காந்தி குமுதினி,**
**தலைவர்,**
**களனி பிரதேச சபை.**

## களனி பிரதேச சபை

### 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்

01. வியாபாரத்தின் பெயர் மற்றும் முகவரி: ..........................................................................................
02. தொலைபேசி இலக்கம்: ..........................................................................................
03. தொலைநகல் இலக்கம்: ..........................................................................................
04. மின்னஞ்சல் முகவரி: ..........................................................................................
05. வியாபாரத்தின் தன்மை:..........................................................................................
06. அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தரின் பெயர் (விசாரிப்பதற்கு) ..........................................
07. அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தரின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்:..........................
08. வியாபார பதிவிலக்கம்:..........................................................................................
09. தேசிய அடையாள அட்டை இலக்கம்:..........................................................................
10. வெட் பதிவிலக்கம் (பெறுமதிசேர் வரி பதிவிலக்கம்)..........................................................
11. பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் வழங்கல் / ஒப்பந்தத்தின் தன்மை: ......................................
12. செலுத்திய பதிவுக் கட்டணம் மற்றும் பற்றுச்சீட்டு இலக்கம்:..................................................

மேற்படி தகவல்கள் உண்மையாவை மற்றும் சரியானவை எனவும் இந்தப் பெறுகையில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்குகிறேன் என சான்று பகர்கின்றேன்.

...................................................... ..............................................
**விண்ணப்பதாரரின் கையொப்பம்** திகதி

---

## முன்மொழிவுகளுக்கான அழைப்பு

TPTL

**டிரின்கோ பெற்றோலியம் டேர்மினல் (பிரைவட்) லிமிடெட்**

**HEALTH ASSESSMENT EVALUATION OF 10 CONE ROOF VERTICAL RIVETTED TANKS AT TPTL, TRINCOMALEE**

**TPTL/BD/22/03**

திருகோணமலை, TPTL இல் உள்ள 10 cone roof vertical rivetted தாங்கிகளின் தகுதிநிலை மதிப்பாய்வு மதிப்பீடு எனும் ஒப்பந்தத்திற்கு தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் டிரின்கோ பெற்றோலியம் டேர்மினல் (பிரைவட்) லிமிடெட் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமான 5,000.00 ரூபாவை (ரூ. 4,464.29 + 12% VAT) செலுத்தியதன் பின் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 4ஆம் தளம், டிரின்கோ பெற்றோலியம் டேர்மினல் (பிரைவட்) லிமிடெட் முகாமையாளர் (திட்டமிடல்) அலுவலகத்திலிருந்து 2022-09-12ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. அல்லது LIOC இணையத்தளம் http://lankaioc.com/tenders. தரவிறக்கம் செய்து கொள்பவர்கள் ஆவணக் கட்டணத்தை டிரின்கோ பெற்றோலியம் டேர்மினல் (பிரைவட்) லிமிடெட்டினால் இலங்கை வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 88340369 எனும் கணக்கிலக்கத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022-09-15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள டிரின்கோ பெற்றோலியம் டேர்மினல் (பிரைவட்) லிமிடெட் முகாமையாளர் (திட்டமிடல்) அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

முன்மொழிவுகளை பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 4ஆம் தளம், டிரின்கோ பெற்றோலியம் டேர்மினல் (பிரைவட்) லிமிடெட் முகாமையாளர் (திட்டமிடல்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

தெளிவுபடுத்தல்களுக்கு (ஏதேனும்) கீழே கையொப்ப மிட்டுள்ளவருடன் தொலைபேசி/தொலைநகல் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
மே/பா முகாமையாளர் (திட்டமிடல்),
டிரின்கோ பெற்றோலியம் டேர்மினல் (பிரைவட்) லிமிடெட்,
4ஆம் தளம், இல: 609,
கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,கொழும்பு-09,
தொலைபேசி: 0094-11-5455103
மே/பா முகாமையாளர் (திட்டமிடல்),

லங்கா ஐஓசி பிஎல்சி,
நிலை 20, மேற்குக் கோபுரம்,
எச்சலன் சதுக்கம், கொழும்பு-01, இலங்கை.
தொலைபேசி: 0094-11-5475720

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397ஆம் அத்தியாயம்) 21ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்**

2022.06.15ஆம் திகதியன்று இடம் பெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை பிரத்தியேகமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு எஸ்.ஆர்.டி. சில்வா அத்தாட்சிப்படுத்திய 2016.06.21ஆம் திகதியிட்ட 4889 எனும் இலக்கத்தினையுடைய ஈட்டுமுறியின் பேரில் இல. 233/2, ஹேயான்துடுவை, மாபிம பியகம எனும் முகவரியிலுள்ள வரையறுக்கப்பட்ட எஸ்பிஜிபி ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவனம் பெற்றுக் கொண்ட தவணைக் கடன் 27,000.000.00 ரூபாய் (இருபத்து ஏழு மில்லியன் ரூபாய் மட்டும்) மற்றும் குறுகியகால தவணைக் கடன் 5,000,000.00 ரூபாய் ஐந்து மில்லியன் ரூபாய் மட்டும்) என்பவற்றின் மீது 2022.05.30 வரையான வட்டியும் முதலுமான 19,756,840.32 (பத்தொன்பது மில்லியன் ஏழு நூற்று ஐம்பத்தாறாயிரத்து எண்ணூற்று நாற்பது ரூபாய் முப்பத்திரண்டு சதம் மட்டும்) ரூபாயும் குறித்த தவணைக் கடன் 27,000.000.00 ரூபாய் (இருபத்து ஏழு மில்லியன் ரூபாய் மட்டும்) மற்றும் குறுகியகால தவணைக் கடன் 5,000,000.00 ரூபாய் ஐந்து மில்லியன் ரூபாய் மட்டும்) ஆகியவற்றின் முதல் நிலுவை மீது ஆண்டுக்கு முறையே இருபத்து எட்டு தசம் ஐந்து பூஜ்ஜியம் (28.50%), இருபத்து எட்டு தசம் ஐந்து பூஜ்ஜியம் (28.50%) என்ற வீதத்தில் 2022.05.31ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை திரட்டப்பட வேண்டிய வட்டியும் வங்கிக்கு நிலுவையாக உள்ளது.
2. மேற்குறிப்பிட்ட 4889 எனும் இலக்கதினையுடைய ஈட்டு முறியின் பேரில் நிலுவையாகவுள்ள 19,756,840.32 (பத்தொன்பது மில்லியன் எழுநூற்று ஐம்பத்தாறாயிரத்து எண்ணூற்று நாற்பது ரூபாய் முப்பத்திரண்டு சதம் மட்டும்) ரூபாயையும் 2022.05.30ஆம் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரையான மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய கீழுள்ள அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்க ஈடு வைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3 விஹார மாவத்தை. கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 21ஆம் பிரிவிற்கேற்ப இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பெருநகரக் கிளையின் அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வைப் பிரிவின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை, அதிகாரி பற்று, பியகம பிரதேச சபை எல்லையினுள் பியகம பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாபிம கிராம உத்தியோகத்தர் பிரிவில் 395 என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்துடன் கனேவெல்ல வீதி, அமைந்துள்ள 'கொடபரக்காவத்த' என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.ஏ. ரூபசிங்ஹ தயாரித்த 2022 மார்ச் 31ஆம் திகதிய 247/2002ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு 3A என அடையாளமிடப்பட்ட காணி குறித்த வரைபடத்தின்படி **வடக்கில்** உரிமம் பெற்ற நில அளவையாளர் கேஜி ஹுபெட் பெரேரா தயாரித்த 1992 ஜனவரி 28ஆம் திகதிய 4916ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2ஐயும் **கிழக்கல்** வீதியாலும் (நெடுஞ்சாலைகள்) **தெற்கில்** 4916ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 4ஐயும் **மேற்கில்** ரம்யா சாந்தனி அவர்கள் உரிமைக்கோரும் காணியையும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் முப்பத்திரண்டு பேர்ச்சுகள் (ஏ0. றூ1. பே32) பரப்பளவுடன் 247/2002ஆம் இலக்க வரைபடத்தின்படி இக்காணியும் அங்குள்ள அனைத்தும் N23998 எனும் இலக்கத்தின் கீழ் கம்பஹா காணிப்பதிவகத்தில் பதியப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.**

**பெயர்: திரு. டபிள்யு.எம்.எச்.ஏ.எஸ்.எஸ்.பி. ஏக்கநாயக்க,**
**பதவி: மூப்புநிலை முகாமையாளர்,**
**அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வை.**

**இலங்கை வங்கி,**
**பெருநகரக் கிளை.**

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want
Classified




For 15 Words Rs. 500/-
* Cost of each additional word Rs. 20/-

Ramani - 077 7 278 948 / Gayani - 011 2 429 342/ 343 / Piyumi - 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# பெறுகை அறிவித்தல்

## ஹம்பாந்தோட்டை பிரதேச சபையின் வாரச் சந்தை மற்றும் மீன் சந்தையை குத்தகைக்கு விடுதல்

ஹம்பாந்தோட்டை பிரதேச சபைக்குரித்தான பின்வருமாறு பெயரிடப்பட்டுள்ள வாரச் சந்தைகளின் குத்தகை உரிமையை 2023.01.01ஆம் திகதி முதல் 2023.12.31ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்காக, இரு பிரதிகளிலாலான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனு பத்திரங்கள் 2022 ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி முதல் 2022 செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி மு.ப. 10.00 வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

விலைமனுப் படிவங்கள் 2022 செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி பி.ப.3.00 வரை, தமது தேசிய அடையாள அட்டை மற்றும் வதிவிடத்தை உறுதி செய்யும் கிராம சேவகரின் சான்றிதழைச் சமர்ப்பிப்பவர்களுக்கு இந்த அலுவலகத்தில் பின்வரும் கட்டணம் அறவிடப்பட்டு விலைமனுப் படிவங்கள் வழங்கப்படும்.

விலைமனுப்பத்திரங்களை நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன்னர் கிடைக்கும் வகையில் தலைவர், பிரதேச சபை, சூரியவெவ வீதி, ஹம்பாந்தோட்டை எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படவோ அல்லது, நேரில் வந்து ஹம்பாந்தோட்டை பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிட்டோ விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

2022 செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி மு.ப. 10.15 மணிக்கு விலைமனுச் சபை முன்னிலையில், விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களையும் அல்லது அதன் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமையை ஹம்பாந்தோட்டை பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது. விலைமனு நிபந்தனைகள், விலைமனுப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக அமையும். வெற்றியாளரான விலைமனுதாரர்களினால் இரண்டு வாரங்களில் பிணை வைப்புத்தொகை வைப்பிலிடப்படல் வேண்டும்.

| வாரச்சந்தையின் பெயர் | ஆகக்குறைந்த விலைமனுத் தொகை (ரூ) | மீளளிக்கப்படாத விலைமனுப் படிவக் கட்டணம் (ரூ) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|
| மயிரபுர வாரச்சந்தை | 18,480,735.00 | 5,000.00 | 75,000.00 |
| பந்தகிரிய வாரச்சந்தை | 192,000.00 | 1,000.00 | 5,000.00 |
| கிரியாகம வாரச்சந்தை | 150,000.00 | 1,000.00 | 5,000.00 |
| பள்ளேமலல வாரச்சந்தை | 12,000.00 | 1,000.00 | 2,000.00 |
| பள்ளேமலல மீன் சந்தை | 24,000.00 | 1,000.00 | 2,000.00 |

மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி இலக்கம் 047-2258098/047-2258099

**காமினி சமரகுணரத்ன,**
**தலைவர்,**
**ஹம்பாந்தோட்டை பிரதேச சபை.**

2022 ஆகஸ்ட் 29ஆம் திகதி
**ஹம்பாந்தோட்டை பிரதேச சபை அலுவலகத்தில்.**

# கேள்விக்கான அழைப்பு (IFB)

## கல்பிட்டி பிரதேச சபை

## சந்தைக் கட்டிடத்தை நிர்மாணித்தல்

01. கல்பிட்டி பிரதேச சபையின் செயலாளர்/தலைவரால் கீழே அட்டவணையில் விபரிக்கப்படுமாறு சந்தைக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக தகைமையும் தகுதியுமுள்ள கேள்வி தாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
02. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்விகோரல் முறைமை (NCB) இன் கீழ் நடைபெறும். எனினும் அது வடமேல் மாகாணத்தின் (நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்துள்ள கேள்விதாரர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
03. ஒப்பந்தங்கள் வழங்குதல் மற்றும் தகைமைகள் பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம் பெறாது இருப்பதுடன் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்திருத்தல் வேண்டும்.
04. தகைமை தேவைப்பாடுகள் கேள்வி ஆவணங்களின் 4ம் பிரிவின் (பகுதியில்) தரப்பட்டுள்ளதுடன் மேலதிக விபர தகவல்களை கேள்வி ஆவணங்களின் 5ஆம் பிரிவில் (பகுதியில்) குறிப்பிடப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்களை கல்பிட்டி பிரதேச சபையின் செயலாளரிடம் தொ. பே. 032-2260274, 032-2260275 பெக்ஸ் 032-2260683 ஈமெயில் kalpitiyaps@gmail.com ஊடாக பெற்றுக் கொள்ள முடிவதுடன் கேள்வி ஆவணங்களை சகல அலுவலக நாட்களிலும் 9.00 மணி முதல் 1600 மணி வரை கீழ்க்காணும் முகவரியில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்களுக்கு ஆங்கில மொழயில் தயாரிக்கப்பட்ட முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றை, கீழே அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை காசாக செலுத்துதல் வேண்டும். அவ்வாறே கேள்வி ஆவணங்களை 2022.08.29 முதல் 2022.09.19 வரை 9.00 மணி முதல் 15.00 மணிவரையான காலத்திற்குள் கல்பிட்டி பிரதேச சபையின் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.
07. கேள்விகளை கல்பிட்டிய பிரதேச சபையின் செயலாளரிடம் 2022.09.20ம் திகதி 13.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். தாமதமான கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் நேரம் முடிவடைந்தவுடன் அன்றே 13.30 மணிக்கு வருகை தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.
08. அக் கேள்விப் பெறுமதி 2022.09.19 முதல் 2022.12.05 வரை (77 நாட்கள்) செல்லுபடியாதல் வேண்டும்.
09. கேள்வியுடன் 2022.09.19 முதல் 2023.01.02 வரை (105 நாட்கள்) செல்லுபடியாகும் கேள்விப் பிணையொன்றை (பிரதேச சபைக்கு காசாக அல்லது வங்கிப் பிணையொன்றை) சமர்ப்பித்தல் வேண்டும்.
10. கேள்விக்கு முன்னரான கூட்டம் கல்பிட்டிய பிரதேச சபையில் 2022.09.13ம் திகதி 10.30 மணிக்கு நடைபெறும் ஆர்வமுள்ள கேள்விதாரர்களுக்கு தமது சொந்தச் செலவில் அக் கேள்விக்கு முன்னரான கூட்டத்திற்கு சமுகமளிக்கலாம்.

**அட்டவணை**

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பிடப் பட்ட செலவு (ரூபா) | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் | தேவைப் படும் தரம் | பிணை முறிப் பெறுமதி (மீளளிக்கப் படும்) | செல்லுபடி யாகும் கால எல்லை |
|---|---|---|---|---|---|---|---|
| KPS/03 MA 06/ 121/ B11/22 | சந்தைக் கட்டிட நிர்மாணம் | 10.10 மில்லியன் | 182 | 5,000.00 | C5/C6 | 120,000.00 | 2023.01.02 |

**தலைவர்,**
**பிரதேச சபை,**
**கல்பிட்டி.**

## பெயர் மாற்றம்

107/10, வரகாரோதவத்த, வெலிமடை வீதி, பண்டாரவளை என்ற முகவரியில் வசிக்கும் (தே.அ.அ.எண்.940204348V) எனும் ஆறுமுகம் விக்னேஷ்வரன் ஆகிய நான் 2005ஆம் வருடம் புனித இஸ்லாத்தை ஏற்றதால் எனது பெயரை மொஹமட் சாபி என மாற்றியுள்ளேன். இனிவரும் சகல ஆவணங்களில் இவ்வாறே கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் சார்பில் பொதுமக்கள் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
மொஹமட் சாபி

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் விதிகளுக்கமைய கொழும்பு -01, உலகவர்த்தக மையம், கிழக்கு கோபுரம், 15ம் மாடியில் தமது பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ள ஜே.எ∴ப். இன்சூரன்ஸ் ப்ரோக்கேர்ஸ் (பிரைவட்) லிமிட்டட் (கம்பனி இல. PV9130) 2021.08.02ம் திகதி முதல் அமுலுக்கு வருமாறு சொல்லப்பட்ட சட்டத்தின் 8ஆம் பிரிவின் பிரகாரம் தனது பெயரை ஆசியா கார்ப் இன்சூரன்ஸ் ப்ரோக்கேர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் என மாற்றம் செய்வதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

**BDO கோர்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**கம்பனி செயலாளர்கள்**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் விதிகளுக்கமைய பன்னிப்பிட்டிய, கொட்டாவ, மாகும்புற, 482/3இல் தமது பதிவு அலுவலகர்களைக் கொண்டுள்ள டீ சீ எஸ் சிங்கப்பூர் லிமிட்டட் (கம்பனி இல. PB00226476) 2021.06.22ம் திகதி முதல் அமுலுக்கு வருமாறு சொல்லப் பட்ட சட்டத்தின் 8ஆம் பிரிவின் பிரகாரம் தனது பெயரை டிஜிட்டல் காம்பெக்ட் சொலுஷன்ஸ் சிங்கப்பூர் லிமிட்டட் என மாற்றம் செய்வதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

**BDO கோர்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**கம்பனி செயலாளர்கள்**

අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාව
**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு**
**COMMISSION TO INVESTIGATE ALLEGATIONS OF BRIBERY OR CORRUPTION**

# கேள்விக்கான அழைப்பு

## மாதாந்த வாடகை அடிப்படையில் இரு (02) கார்களைப் பெற்றுக்கொள்ளல்

